R. No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஷூ வைகாசி-மீ 14-உ (27—5—1934) | மலர் 27.

இனாம்! சந்தாதாரர்களுக்கு இனாம்!

அருமையான புத்தகங்கள் இனாம்!

நமது "புரட்சி" பத்திரிகைக்கு ஜுன் மாதம் 1-தேதியிலிருந்து 31-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாராய்ச்சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

கைவல்யம்		0–8–0
இந்தியாவின் குறைபாடு		0–8–0
இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்)		0–8–0
மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை		0–8–0
லெனினும் மதமும்	அணா 4	0–8–0
பொதுவுடமைத்தத்துவம்	,, 3	
போல்ஷ்விக் முறை	,, 1	
கடவுளும் பிரபஞ்சமும்	அணா 4	0–8–0
சோஷியலிசம்	,, 3	
இலங்கை உபந்யாசம்	பை 6	
சமதர்ம உபந்யாசம்	,, 6	

மானேஜர், "புரட்சி", ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

வெ. ரா. சொற்பொழிவு.
விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னாட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா	ரூ.	3—0—0
6 மாதம்	,,	2—0—0
3 மாதம்	,,	1—4—0

மானேஜர்,
"தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு	ரூ.	3—0—0
வெளிநாடு	ரூ.	5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
அண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள்!!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1¾ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

இன்றைய ரஷியா.

குழந்தைகளின் இல்லங்களும் அரண்மனைகளும், ஆண்பெண்களின் சம்பந்தமும்,

:0:

(நித்தியநாராயணபானர்ஜி எழுதியது.)

(ஏ. வி. சீனிவாசன் மொழிபெயர்ப்பு)

நான் ரஷ்யாவில் குழந்தைகளின் (Nursery Home) இல்லத்திற்கு சென்றேன். அதில் விளையாட்டு அறையிலிருந்த ஓர் பெரிய வீணையுடன் சிறிது வயதான குழந்தைகள் பாடிக் கொண்டும், ஆடிக்கொண்டும் இருந்தனர். இவ்வாறாக இவர்கள் திரேகப் பயிற்சிசெய்கின்றனர். அங்கேஆகாய விமானம், கப்பல், கப்பலிலுள்ள சில சாமான்கள், பம்பு இயந்திரம், இராணுவ வீரன் போன்ற முதலிய சாமான்களே விளையாட்டு பொம்மைச் சாமான்களாக இருந்திருக்கின்றன. ஒவ்வொரு சாமானும் முக்கியமானவையே யாகும். குழந்தைகளை பயப்படுத்தவும், மூடர்களாக்கவும் அங்கே பேய், பிசாசு, சாமிகள் போன்ற சாமான் பொம்மைகள் ஒன்றுமில்லை. வங்காளத்தில் குழந்தைகள் செய்வது போல் பொம்மையில் செய்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் அக்குழந்தைகள் கல்யாணம் செய்வதும் கிடையாது. பொய்யான கடவுள்களையும், தேவதைகளின் உருவத்தையும் வணங்குவது கிடையாது, ஒவ்வொரு பையனுக்கும், எந்த சாமானுடனாவதுவிளையாடுவதற்குச்சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. அவன் எந்த விளையாட்டை விரும்புகிறான் என்று கவனிக்கப் பட்டு வருகின்றது. அதிலிருந்தே அவன் மனப்பான்மை அறிந்து அவன் சாயம் பூசும் தொழிலை செய்ய விரும்பினால் அவனது பிற்றை நாளில், கல்வி பயிலும் போது அத்துறையில் அவனை அபிவிருத்தி செய்யப்படும். அவனுக்கு எஞ்சினீரிங்கிலாவது, இராணுவத் துறையிலாவது, விவசாயத்திலாவது, கைத்தொழிலிலாவது, விருப்பம் இருப்பின், அத்துறையில் அவனை அபிவிருத்தி செய்ய எல்லா உதவியும் அவனுக்கு அளிக்கப்படுகின்றது. ரஷ்யக் குழந்தைகளை சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே அதிக ஊக்கமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றது. அவர்களது நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகளை ஒன்றும் தப்பாமல் படி பத்திரமாக வைக்கப் பட்டுள்ளன. அவர்களின் சுய உணர்ச்சிகளை வெளிப் படுத்தாமலும், உரிமையற்றவர்களைப்போலவும் அவர்களை நடத்துவது கிடையாது. ரஷ்ய தேசத்து அரசாங்கத்தார் ஒவ்வொரு தனித்த மனிதனுக்கும் வேறு விதமான மனப்பான்மையும் ஊன்றிய நோக்கங்களும் உள்ளனவென்றும், அவைகளுக்கு யாதொரு இடையூறும் செய்யப்படாதென்றும் அறிந்துள்ளார்கள்.

குழந்தைகளின் வயதிற்கு தகுந்தவாறு குழந்தைகளை வகுப்புவாரியாகப் பிரித்து அவர்களைக் கவனிக்கப்பட்டு வருகின்றது. ஒரே அறையில் சுமார் 30 சிறிய குழந்தைகள் தூங்கிக் கொண்டு இருந்தன. குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் பெண் தன் பார்வையிலுள்ள எல்லாக் குழந்தைகளைப் பற்றி ரிப்போர்ட்டை தயார் செய்து கொண்டு இருந்தாள். அவள் தினமும் குழந்தைகளின் திரேகத்தின் உஷ்ண அளவையும் மலம், ஜலம் கழித்த விபரத்தையும், எத்தனை தரம் அழுதது என்றும் இத்தகைய இதர குறிப்புகளையும் எழுதி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் தனியாக கவனிக்கப்படுகின்றது. ஒவ்வொருகுழந்தையும் ஆரோக்கிய சாஸ்திர முறையே போல் கைகளை மேலே வைத்து தூங்குகின்றன.

ஏதாவது ஓர் குழந்தைக்கு பிசகு ஒன்று நேரிடுமானால், அதை தனியே கொண்டு வந்து விட்டு வைத்தியரிடத்தில் எடுத்துக் கொண்டு போகப் படும்குழந்தையின் தாய் குழந்தையை தன் வீட்டிற்கு எடுத்துச் செல்லமாட்டாள், ஆனால், வேண்டுமானால் அவளும்அங்கேயே தங்கிவிடுவாள். ரஷ்யத்தொழிலாளிகளின் குழந்தைகளை ஆரோக்கிய சாஸ்திர முறையிலும் சுகாதார முறையிலும் காப்பாற்றப் படுகின்றதென்பதையும் அவர்களை கவனிக்கும் முறைமையையும் கண்டு நம் நாட்டி (இந்திய நாடு) லுள்ள அதிக பணக்காரன் பொறாமை கொள்ளக்கூடும். நான் எல்லாம் பார்த்து முடிந்தது பிறகுபிரயாணிகளின் புத்தகத்தில் என்னுடைய அபிப்பிராயத்தை எழுதும்படிஎன்னை வேண்டிக் கொண்டதின் பயனாக, நானும் உடனே சந்தோஷமாக அதில் எழுதினேன்.

உள்நாட்டுச் சுற்றுப் பிரயாணி வாடகைக் காரை அனுப்பி இருந்தார் அதுவும் வெளியே தயாராக இருந்தது. நாங்கள் பட்டணம் முழுவதும் சுற்றுவதற்கு அதில் ஏறிச்சென்றோம். விரைவில் நாங்கள் நீவா நதியின் பக்கமாக வந்தோம். மந்திரவாதியின் கோலின் காரணமாக, அந்நதியின்பளிங்கு போன்றதும், நடனமாடி வருவதை யொத்ததுமான அலைகள் பனிக்கட்டியாக மாறி இருந்தன போல் தோன்றியது. பனி அந்த அகன்ற நதிக்கரைகளின் மத்திய பாக முழுமையும் மூடி இருந்தது. கல்லூரியும், கப்பல் சம்பந்தமுள்ள ஆபீஸையும் உள்பட அனேக முக்கியமான கட்டடங்களையும் நாங்கள் வழியில் கண்டோம். நீவா நதிக்கரையில் அமர்ந்துள்ள தொழிலாளிகளின் ஆபீசில் முன்னர் ராஜீயக் கைதிகளை சிறைப்படுத்தி வதைக்கப் பட்டதாகும். அது முதன் முதலில்பொதுவுடமைக் கட்சியின் நடுத்தர கூட்டுறவு ஆபீஸாகவும், பிற்காலத்தில் ஷேசின்ஸ் கேயாவின் வீடாகவும் இருந்தது. அயல் நாட்டிற்கு நாடு கடத்தப் பட்ட லெனின் திரும்பி வந்ததும் அவ்வில்லத்தின் மேடை மீது நின்று தன்னைப் பின் பற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் முதன் முதலில் பிரசங்கித்தார் இந்த ஓர் பெரிய சிவப்பு நிறமுள்ள கட்டிடம் கீர்த்தி பெற்ற சிற்பி ரோசி, என்பவரால் 1819 முதல் 1825 வரையில் கட்டப்பட்டது. அது முதலிலிருந்து இது வரையில் இராணுவம் தங்குகின்ற இடமாகும். தற்போது புரட்சியின் காட்சி சாலையாக மாற்றப் பட்டுள்ள பெயர்பெற்ற ஜார் அரசனின் கோடை காலத்து அரண்மனைக்கு முன்னால் இக்கட்டிடம் அமைந்துள்ளது. இந்த பெரிய விசித்திர கட்டடத்தைத்தவிர்த்து உலகத்தில் கீர்த்தி பெற்றதும், ஜார் காலத்தில் படங்கள் எழுதப் பெற்ற ஓர் அழகு வாய்ந்த காட்சி சாலையை 1617 முதல் 1681 வரையில் கோரார்டு டெர்போர்ச்சினால் கட்டப் பட்டது. அதில் இப்பொழுது கூட பெயர் பெற்ற இட்டாலி, பிரான்சு தேசத்திய கைதேர்ந்த வேலைக்காரர்களால் எழுதிப் பெற்ற அழகுள்ள படங்களும் உள்ளன. ஜார் குமாரர்கள், குமாரத்திகள், அவரது சுற்றத்தார்களின் அரண்மனைகளை யெல்லாம் பார்க்கத் தகுந்தவையாகும். இந்த ஜார் அரண்மனைக்கு முன்னிலையில் "பான்கு பேலஸ்" என்ற ஓர் அழகிய பொழில் இருக்கின்றது. இப்பொழில் ஜார் அரசனின் அரண்மனையிலிருந்து வெகு தூரம் இல்லை. இதில் ஆயிரக்கணக்கான "புரட்சிக்காரர்கள் இறந்த சதுக்கம்" என்று அழைக்கப்பட்டு வருகின்றது. முக்கியமான கட்டிடங்களையும்பொழிலையும் பார்த்து முடிந்தானவுடன் நாங்கள் நகரத்திற்கு வெகு தூரத்திற்கப்பால் காரில் ஏறிச் சென்றோம். அங்கே தான் ஜார் அரசனுக்கு கோடை காலத்திற்காக கட்டப்பட்டுள்ள அரண்மனையும் இருந்தது. இந்த அழகு வாய்ந்த மூன்று அடுக்கு மாடியுள்ள இக்கட்டிடம் ஜார் அரசனின் காலத்தில் எவ்வாறு இருந்ததோ, அவ்வாறே தான் இன்றும் இருக்கின்றது. முற்காலத்தில் அரசன் ஏழை ஜனங்கள் கஷ்டப் பட்டுக் கொடுக்கும் பணத்தை யெல்லாம் (வரிகளை) வீணே எவ்வாறு செலவழித்தான் என்பதை ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காகவே சில சாமான்களை முன்னர் இருந்தவாறு அங்கே பத்திரமாக வைக்கப் பட்டுள்ளன. இதற்குள் சாப்பாட்டிற்கு நேரமாகி விட்டது.

விவாக முறை.

நாங்கள் அன்று மத்தியானம் ஓட்டலுக்குத் திரும்பி வந்து சீக்கிரமாக சாப்பிட்டு, விவாகம் செய்து கொள்ளவும், விவாக விடுதலை பெறுவதற்கும் ஏற்பட்டுள்ள ரிஜிஸ்டர் ஆபீசை பார்க்கச் சென்றோம். இது பெரிய கட்டடத்தின் இரண்டாம் மாடியில் இருக்கின்றது.

இந்த சிறிய ஆபீசில் இரண்டு குமாஸ்தாக்களும் மற்றும் இருவரும் (ஓர் ஆணும் ஓர் பெண்ணும்) உட்கார நாற்காலியும் மற்றும் அனேக பெஞ்சுகளும் இருந்தன. ரிஜிஸ்டிரார் மேஜையின் சமீபத்திலுள்ள பெஞ்சுகள் மீது நாங்கள் உட்கார்ந்தோம், எனது வழிகாட்டி ரிஜிஸ்ட்ராருக்கும், இருவருக்கும் (அங்கு வந்துள்ள ஆணும் பெண்ணும்) நடந்த சம்பாஷணையின் வினாக்களையும் பதிலையும் மொழிபெயர்த்து கூறினாள். அவ்விருவரும் காலையில் இந்த ஆபீசில் இரண்டு ரூபில்கள் (ரஷிய தேசத்து நாணயம்) கட்டுவார்களேயாகில், அவர்களுக்கு நெம்பர் அளிக்கப்படும். ரிஜிஸ்டர் செய்யும்போது ரிஜிஸ்ட்ரார் வரிசையாக கூப்பிடுகிறாள். இருவரும் அவளது முன்னால் நின்று ரஷிய தேசத்துப் புதிய சட்டப் பிரகாரம் ஒவ்வொருவரும் அந்தந்த ஊரின் போலீஸ் இடமிருந்து பாஸ் போர்ட்டைக் கொண்டு வந்து அவளிடத்தில் கொடுக்க வேண்டியது. ரிஜிஸ்ட்ரார் கல்யாணப் பெண்ணின் பெயரும், மாப்பிள்ளையின் பெயரும் தன்னுடைய புத்தகத்தில் எழுதிக் கொண்டு அப்புத்தகத்தில் இருவரையும் கையெழுத்திடுமாறு கேட்டுக் கொள்ளுவாள். அத்துடன் எல்லாம் முடிவடைகின்றது.

அதாவது அவர்கள் இருவருக்கும் விவாகம் முடிவு பெற்றது. இவ்விவாகம் அவர்கள் யாருக்காவது இரண்டாவதா என்றும், அவர்களது வயதையும் மட்டும் தான் கேட்கப் படுகின்றது. அப்போது அங்கே ஓர் வித ஆடம்பரமும் இல்லை; புரோகிதனும் இல்லை, கல்யாணப் பெண்ணுக்கு தோழியும் கிடையாது.

(தொடரும்.)

மதிப்புரைகள்.

(S. G.)

1. **Questions for Catholics**—by F. H. Hapward (கத்தோலிக்கர்களுக்குக் கேள்விகள்) விலை ரூ. 1—2—0. Higginbothams Ltd, Mount Road, Madras.

இப்புத்தகம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாகும். செஸ்டர்டன், பெல்லக், வெஸ்ட் மினிஸ்டர் ஆர்ச்பிஷப் முதலியவர்கள் இதன் ஆசிரியர். இதில் கத்தோலிக்கமதத்தினரை "கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லட்டும்" என்று அறை கூவி அழைக்கப்பட்டிருக்கிறது. கத்தோலிக்க கிறிஸ்துவர்களை வெகு மரியாதையுடன் இதன் ஆசிரியர் நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்டிருக்கிறார், கத்தோலிக்க மதத்தின் வண்டவாளங்களைப் புட்டுப்புட்டு வெளியாக்குவதில் நான் இதை மிஞ்சிநிற்கும் புத்தகம் படித்ததேயில்லை. இதன் ஆசிரியர் கேட்கும் கேள்விகள் அனைத்தும் சரித்திரத்தையும் ஆராய்ச்சியையும் ஆதாரமாகக்கொண்டவை. முரட்டுத்தனமான வார்த்தைகளோ, மதக்காரர்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய வாக்கியங்களோ, இதில் சிறிது கூட இல்லை யென்றே சொல்லலாம். எண்பது பக்கங்களைக் கொண்ட இப்புத்தகம் படிப்பதற்கு வெகு ருசியாகவும், லகுவான பாஷையிலும் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்புத்தகத்தை ஒரு முறை படித்து பொறுமையுடன் யோசித்துப்பார்க்கும் எந்த கத்தோலிக்கத் தோழரும் உடனே உண்மையை உணர்ந்து பகுத்தறிவைக் கடைப்பிடிப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

2. **Christianity and Conduct**—by Hypatia Bradlaugh (கிறிஸ்து மதமும், நடத்தையும்) விலை அணா 4. 115 பக்கம். Higginbothams Ltd, Mount Road, Madras.

மேல் நாட்டு அறிவாளிகள் மிகச்சிறந்தவராயும், பெரிய அறிவியல் வாதியாயும் இருந்து 100-வருஷங்களுக்கு முன்பு காலஞ்சென்ற பிராட்லா என்பவரின் குமாரியான லஹிப்பேஷியா என்னும் சகோதரியால் எழுதப்பட்டதாகும். கிறிஸ்து மதத்திற்கும், மனித சமுதாயத்தின் ஒழுக்கத்திற்கும் எவ்வளவு சம்பந்தம் என்பதையும், கிறிஸ்து மதமானது அடிமைத்தன்மை, பழிக்குப்பழி வாங்கும்குணம், சண்டை, பிறரைக்கொடுமைப்படுத்துதல் முதலிய வெறுக்கப்பட வேண்டிய குணங்கள் தளர்த்திருக்கிறது என்பதை மிகத் தெளிவாயும் எளிய நடையிலும் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்து மதமானது குறிப்பாக பெண் சமூகத்தை எப்படி அடக்கி ஒடுக்கிவைப்பதற்குதுணையாக இருக்கிறது என்பதை புத்தக ஆசிரியர் வெகு அருமையாய் விளக்கி காட்டியிருக்கிறார். கன்னிகாஸ்திரீகள் என்ற பெயரால் நடக்கும் அக்கிரமங்களும் ஆபாசங்களும் சுருக்கமாய் விளக்கப்பட்டிருக்கிறது. பைபிளை சரிவர படித்தறியாமலிருக்கும் நம் நாட்டு இமிடேஷன்கிருஸ்தவர்கள் இந்நூலைப்படித்தால் தங்களது குறுகியபடிப்பும், அதைவிட குறுகியயோசனை சக்தியும் எவ்வளவு தூரம் தங்களுடைய அறிவுகண்களை மூடிக்கொண்டிருக்கின்றன என்பதை உணர்வார்கள், இப்புத்தகம்தமிழில்மொழிபெயர்க்கப்படுமானுல் தமிழ் நாட்டு கிறிஸ்தவர்களிடம் பகுத்தறிவு உணர்ச்சியை பரப்புவதற்கு ஒத்தாசையாயிருக்கும்.

3. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்:— ஆசிரியர் பாரதிதாசன் விலை அணா ஒன்று. கிடைக்குமிடம் பாரதிதாசன், 12-செங்குந்தர் வீதி, புதுச்சேரி.

பாரதிதாசன்பாடல்களைப்பற்றி தமிழ் நாட்டினருக்கு நன்கு தெரியும் "நாஸ்திகம் பரவி, புராணங்கள் அழிந்து போனுல் தமிழ் மொழி வளர்ச்சி குன்றிப்போகும்; இலக்கியம் அழியும்; கலையுணர்ச்சி குறையும்!! என்று அஞ்சுகின்ற தமிழ் புலவர்கள் நாஸ்திகரால் எழுதப்பட்ட இச்சிறு ஏட்டை ஒரு முறை படிக்க வேண்டியது மிக்க அவசியம். ஆசிரியர் இயற்கையையும், காதற்சம்பவங்களையும் வர்ணிக்குமிடங்களில் ஏற்படும் தமிழ் மொழியின் இன்பமும், சுவையும் பாமரரைக்கூட சொக்கும்படி செய்யுமென்றால் அதிகநாகரிகர் கூறுவானேன்.

இந்தியாவை வர்ணிக்கும் ஓரிடத்தில், "தேன் சுரக்கப்பேசி இந்து தேசத்தை தின்றுதற்கு வான் சுரரை விட்டு வந்த பூசுரரும் வாழ்கின்றார்" என்று வார்த்தைகளை ஆணி அடிப்பது போல் அந்தந்த இடத்தில் அடித்திருப்பதானது கவியின் சாமர்த்தியத்தை விளக்குகிறது. நமது கவியின் எழுது கோல் முனையில் தமிழ் மொழியானது பஞ்சு நூல் போல் தொடர்ந்து வருமோ என்னவோ?

செங்குந்தர் 21-வது மகாநாடு
செங்குந்தர் வாலிபர் 2-வது மகாநாடு.
திருப்பூர்.

செங்குந்தர் 12-வது மகாநாடும், செங்குந்தர் 2-வது வாலிபர் மகாநாடும் 20, 21—5—34 ஞாயிறு, திங்கட் கிழமைகளில் திருப்பூர் முனிசிபல் ஹைஸ்கூல் ஹாலில் முறையே சென்னை சட்டசபை மெம்பர் உயர் திரு. வி. டி. அரசு, பி. ஏ. அவர்கள் காஞ்சீபுரம் சி. என் அண்ணாத்துரை பி. ஏ. ஆனர்ஸ் அவர்கள் தலைமைகளில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இம்மகாநாட்டுக்குப் பல ஜில்லாக்களிலிருந்தும், கோவை ஜில்லாவின் பல பாகங்களிலுமிருந்தும் பெருந்திரளான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள்.

மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, மாஜி மந்திரி எஸ். முத்தையா முதலியார், சி. நடராஜன், ஜே. எஸ். கண்ணப்பர், வி. டி. அரசு, சி. என். அண்ணாத்துரை, வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், பழைய கோட்டை பட்டக்காரர் முதலிய அநேக கனவான்களாகும். இவர்களை ரயில்மேடையிலேயே வரவேற்று தலைவர்கள் தங்கும் ஜாகைக்கு அழைத்துச் சென்றார்கள். தலைவர்களை தலைவர்கள் தங்கியிருந்த பங்களாவிலிருந்து மோட்டாரில் மேள வாத்தியங்களுடன் வரவேற்று நகரின் முக்கியவழியாக ஊர்வலமாக காலை 9.30மணிக்கு மகாநாட்டு ஹாலுக்கு அழைத்துச் சென்றார்கள் சென்னை தோழர் ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் மகாநாட்டுக்கொடி ஏற்று விழாவையாற்றி பிரசங்கம் செய்தார்.

2வது வாலிபர் மகாநாடு ஆரம்பம்

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் வாலிபர் மகாநாட்டை ஆரம்பித்துவைத்து பிரசங்கம் செய்தார். பின் வாலிபர் மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் வரவேற்புப்பிரசங்கம் நடைபெற்றது.

மகாநாட்டுத்தலைவர்காஞ்சீபுரம்தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமைப்பீடத்தமர்ந்து தனது தலைமைப்பிரசங்கத்தைப்படித்தார். பின் னர்த்தலைவருக்கும்திறப்பாளர்கட்கும் கொடியேற்றுவிழா நிகழ்த்தியவருக்கும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டு மலர் மாலை சூட்டினார்கள்.

காரியதரிசி அவர்களால் சென்ற ஆண்டு மகாநாட்டு அறிக்கை (யதாஸ்து) வாசிக்கப்பட்டு யாவருக்கும் வழங்கப்பட்டது. இத்துடன் முன்பகல் நிகழ்ச்சி 1மணிக்கு முடிந்து சாப்பாட்டிற்காக கலைவுற்றது.

சேங்குந்தர் 2-வது மகாநாடு ஆரம்பம்.

இம்மகாநாடுபிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாயிற்று சென்னை அரசாங்க மாஜிமந்திரி எஸ். முத்தையா முதலியாரவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்து பிரசங்கம் செய்தார்.

மகாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் எம். ஷண்முகம் முதலியாரவர்கள் வரவேற்புப் பிரசங்கம் நடைபெற்றது.

மகாநாட்டுத்தலைவர் சென்னை தோழர் வி. டி. அரசு பி. ஏ. எம். எல். சி. அவர்கள் தலைமைப்பீடத்தமர்ந்து தனது தலைமைப் பிரசங்கத்தை வாசித்தார். மகாநாட்டுத்லைவர், திறப்பாளர்க்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

மகாநாட்டுக் காரியதரிசி தோழர் என். எம். நடேசன் அவர்கள் சென்ற ஆண்டு அறிக்கையை வாசித்தார். எல்லோருக்கும் அக்காப்பிகள் வழங்கப்பட்டது.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் "சமதர்மம்" என்பது பற்றி மிக விளக்கமாகவும், விரிவாகவும் நீண்டதொரு பிரசங்கம் செய்தார்.

மகாநாட்டுத் தலைவர்கள், நிர்வாகஸ்தர்களடங்கிய ஒரு போட்டோ எடுக்கப்பட்டது. இத்துடன் இம்மகாநாடு 6-30 மணிக்கு முடிவடைந்தது.

இரண்டாம்நாள்.

பிரதம மகாநாட்டின் விஷயாலோசனைக் கூட்டம் 21-4-34ந்தேதி காலை 9-30மணிக்கு மகாநாட்டு ஹாலில் கூட்டி நீண்ட வாதங்கட்கிடையில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

வாலிபர் மகாநாடு

வாலிபர் மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி 11மணிக்கு ஆரம்பமாயிற்று. பல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தோழர்கள் க. செல்வராஜ், க. பால சுப்பிரமணியம் ஆகியவர்கள் "ஒற்றுமை" விடுதலை என்பது பற்றி பிரசங்கம் செய்தார்கள்.

தலைவர் சமூக சீர்திருத்தம் பகுத்தறிவியக்கம் சமதர்மம் என்பது பற்றி நீண்ட தொரு விரிவுரையாற்றினார்.

தோழர்கள் என். எம். நடேசன், டி. ஜி. வெங்கிடாசலம் ஆகியவர்களால் நன்றி கூறப்பட்டது. இத்துடன் 12-30மணிக்கு முற்பகல் நிகழ

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

“பகுத்தறிவு” பத்திரிகை தொடங்கி சற்று ஏறக்குறைய ஒரு மாத காலமே ஆகின்றது. நடந்த வரை லாபமும் இல்லை நஷ்டமும் வெகு சுருக்கமே ஆகும். இந்தச் சிறிது காலத்தில் சொல்ப நஷ்டத்தில் மக்களுக்கு ஏதோ ஒரு அளவில் குறிப்பிடத்தக்க ஒரு பலனைக் கொடுத்திருக்கின்றது என்று தைரியமாய் சொல்லலாம். என்றாலும், இனியும் இது நடத்தப்பட வேண்டியது அவசியமில்லை என்றே கருதுகிறோம். பத்திரிகைகள் மனித சமூகத்திற்கு அவசியமானது என்பதில் நமக்கு சிறிதும் அபிப்பிராய பேதமில்லை. ஆனால் அவை இரண்டு காரியங்களுக்கே முக்கியமான தேவையாகும். ஒன்று உலக வர்த்தமானங்களை மக்களுக்கு அறிவித்து மக்களது அறிவை உலக இயலை உணர்ந்து நடந்து கொள்ளச் செய்வது. இரண்டு புதிய அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி மனித சமூகத்தை முற்போக்கடையச் செய்வதாகும்.

ஆனால் இன்றைய பத்திரிகை உலகமானது இந்த இரண்டு காரியங்களின் பேராலேயே பெரிதும் நடத்தப் படுவதாகச் சொல்லப் படுமானாலும் உண்மையில் பார்க்கப் போனால் வெகு சில பத்திரிகைகளே இக்கொள்கைக்கேற்ப நடத்தப்படுவதாகக் காணப்படும்.

பத்திரிகை நடத்துவது என்பது ஒன்று நடத்துபவரின் ஜீவனோபாயத்தை முக்கிய குறிக்கோளாகக் கொண்டது. இரண்டு, தனது சுயநலத்தையும், கீர்த்தியையும் உத்தேசித்து தம் தம் வாழ்க்கைப் பெருமையையே குறிக்கோளாக்கொண்டு நடத்தப் படுவது.

இப்பொழுது நடைபெறும் பத்திரிகைகளில் அநேக பத்திரிகைகளை முன் சொல்லப் பட்ட இந்த இரண்டு தலைப்புக்களுக்குள்ளாகவே சேர்க்கலாம். என்றாலும் முன் சொல்லப்பட்ட கருத்துக்களுடன் நடைபெறும் பத்திரிகைகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

பரலோகத்தையும் சுவர்க்கலோகத்தையும் காட்டி வயிர் வளர்க்கும் தொழில் புரட்டையும் இழிவையும் விட பத்திரிகை நடத்தி வயிர் வளர்க்கும் தொழில் கேவலம் என்று சொல்லி விடமுடியாது.

பகுத்தறிவு.

இன்றைய தினம் அரசியலில் தலையிட்டு சிறிது நாளாவது வேலை செய்து அதன் பயனாய் ஒருவர் தேசபக்தன் என்றோ அல்லது தேசியத் தலைவர் என்றோ அழைக்கப்பட நேரிட்டு அப்படிப் பட்டவருக்கு தகுதியான ஜீவனோபாயத்திற்கு மார்க்கம் இல்லாதிருக்குமானால் அவர்கள் கண் முன்னும் மனதின் முன்னும் சதா இருந்து கொண்டு இருப்பது “ஒரு பத்திரிகை நடத்த வேண்டும்” என்கின்ற ஆசையும் உற்சாகமுமேயாகும். இதை குற்றம் என்று நாம் சொல்ல வரவில்லை. இயற்கையின் ஆட்சி என்றே சொல்லுகிறோம். சில வன்மனம் படைத்தவர்கள் இந்த இயற்கை ஆட்சியில் இருந்து தப்பி[illegible]கிறார்கள். சிலர் தப்ப முடியாமல் இயற்கையை எய்தி விடுகிறார்கள்.

இதன் பயனாகத்தான் இந்த பத்து பதினைந்து வருஷ காலத்தில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் தோன்றி மறைய ஏற்பட்டன.

அதில் ஒன்று நமது பகுத்தறிவாய் இருக்கலாமா? என்று யாராவது கேட்டால் இல்லை என்று அடியோடு மறுத்துச் சொல்லுவதற்கு போதிய ஆதாரம் இருப்பதாகச் சொல்ல முடியாது.

பகுத்தறிவு டிக்ளரேஷன் ஐந்து வருஷத்துக்கு முன்னாலேயே பெற்றிருந்தது. தின சரியாக நடத்துவதற்காக அல்ல. அதை ஒரு மாதவெளியீடாகவும் வருட சந்தா 8 அணாவில் நடத்துதாகவும் உத்தேசித்து சிறு புத்தக அளவில் கோர்வையாகத் தொடர்ந்து நடத்த உத்தேசப்பட்டு டிக்களரேஷன் வாங்கப்பட்டு பல காரணங்களால் நடத்த முடியாமல் போய்விட்டதென்றாலும் அதை பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாக ஒரு மாதவெளியீடாக முயற்சி செய்து சமீப காலத்தில் டிக்களரேஷன் புதுப்பிக்கப்பட்டதென்றாலும் சில வாலிபர்களின் உள்ளத்தெழுந்த அதிருப்தியும் ஆத்திரமும் இவ்வளவு சடுதியில் தினசரியாக நடத்தச் செய்து விட்டது. அதாவது சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தினசரி தேவை என்றும் இப்பொழுது நாட்டில் நடமாடும் தினசரிகளில் பெரும்பான்மையானவை சுயமரியாதை இயக்கத்திற்கு உதவி செய்யாவிட்டாலும் இடையூறும் பழியும் உண்டாகும்படி செய்யவே முயற்சிக்கின்றன என்றும் நினைத்தது ஆதலால் “நமக்கென்று ஒன்று இருக்கவேண்டும்” என்ற கருத்தால் ஏற்படவேண்டியதாயிற்று. இக்கருத்து சரியா தப்பா? என்பதைப்பற்றி இப்போது நாம் ஏதும் சொல்ல ஆசைப்படவில்லை. அன்னியர்கள் அதுவும் நமது கருத்துக்கு மாறுபட்டவர்கள், அவ்வளவோடு மாத்திரம் இல்லாமல் [illegible]ங்கள் தனிப்பட்ட நலனுக் [illegible] சமூகத்திற்கு கடும் விரோதி என்று நம்மையும் நமது கொள்கைகளையும் கருதியவர்கள் நம்மால் தயவாகவோ தாக்ஷிண்யமாகவோ நடத்தப்படாதவர்கள் நமது கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இடந்தராததும் பத்திரிகை ஒழுங்கு முறைப்படி நடந்து கொள்ளாததும் குற்றம் என்று நாம் கருதுவோமேயானால் அதுமுட்டாள் தனமும் சுயமரியாதை அற்ற தனமும் நமது தோல்வியை ஒப்புக்கொண்டதனமும் ஆகுமே தவிர வேறில்லை.

அன்றியும் அப்படிப்பட்ட பத்திரிகைகள் நமக்கு எவ்வளவு கெடுதி செய்தது என்றாலும் அனுகூலம் செய்யவில்லை என்றாலும் நமது கொள்கைகளோ இயக்கமோ ஆரம்பத்திலிருந்து நாளதுவரை முற்போக்கிலும் மேம்பாட்டிலும் இருந்து வருகின்றனவே ஒழிய பிற்பட்டு விடவில்லை. ஆதலால் அன்னியர்கள் மீதும் ஆத்திரம் கொள்ளவும் இடமில்லை. அன்றியும் அவரவர்கள் வாழ்க்கைக்கு திட்டம் கோலிக் கொள்ள தனி உடமை உலகத்துக்கு சுதந்திர முண்டு.

சுயமரியாதை இயக்கத்துக்கு இதுசமயம் ஒரு பத்திரிகைக்கு மேல் அதுவும் வாரப்பத்திரிகையாக அல்லாமல் மற்றெவ்விதத்திலும் நடத்த நாட்டில் இடம் இல்லை. எப்படியென்றால் சுயமரியாதை இயக்கத்திற்காக இயக்க சார்பாய் என்று இதுவரை சுமார் 20 பத்திரிகைகள் வரையில் தினப்பதிப்பு வாரப்பதிப்பு மாதப்பதிப்பு என்பதாக ஏற்பட்டு அவைகள் பெரிதும் மறைந்துபோய் இருக்கின்றன. அதனால் இயக்கத்துக்கும் கெட்ட பெயர் ஏற்பட்டும் இருக்கிறது. இந்த உண்மைகளையும் அனுபவங்களையும் கண்ட பிறகும் நாம் இனியும் இயக்கத்தின் பேரால் பத்திரிகைகளை புதிது புதிதாய் தொடங்குவது என்பது மனதாரத் தெரிந்தே தப்பான காரியத்தைச் செய்கின்றோம் என்பதேயாகும்.

அன்றியும் இது சமயம் பத்திரிகை உலகம் நெருக்கடியில் இருக்கிறது. செல்வாக்குள்ள பத்திரிகைகள்கூட பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டன. சில 100க்கு 50 வீதம் சந்தாதாரர்கள் குறைந்து விட்டன. பத்திரி[illegible] சில நூற்றுக்கு ஐம்பது வீதம் குறைக்கப் பட்டு விட்டன. இந்த நிலையில்சில பத்திரிகைகள் எவ்வித உற்சாகமும் அவசியமும் இல்லாமல் “ஆரம்பித்து விட்டோமே இனி நிறுத்தினால் அவமானமே” என்கின்ற தத்துவத்திற்காகவே நடைபெறுகின்றன. இந்த நிலையில் “பகுத்தறிவு” தினசரி நடத்துவது என்பது வேண்டுமென்றே தொல்லையையும் நஷ்டத்தையும் ஏற்றுக்கொள்வதாகும் என்று தோன்றுகிறது.

நிற்க இதுசமயம் தமிழ்நாடு பத்திரிகை ஏதோ ஒரு அளவுக்காவது சுயமரியாதை இயக்க செய்திகளை பிரசுரித்து வருவதை அறிகிறோம். அது மாத்திரமல்லாமலும் அது மிகக் குறைந்த விலையாகிய ½ அணாவுக்கு இறக்கப்பட்டும் விட்டது. கொள்கை விஷயத்திலும் சமீப காலமாக அதன் போக்கு நமக்கு விரோதமானது என்று கருதுவதற்கு இல்லாமலும் இருக்கிறது. ஆதலால் நமது கொள்கையைப் பரப்ப புரட்சியையே ஆதாரமாகவும் செய்தியை தெரிவிக்க தமிழ்நாடுவின் சகாயத்தையே அனுகூலமாகவும் கொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

தமிழ் நாடு பத்திரிக்கை 8பக்கம், 10பக்கம், 12பக்கம், நல்ல

தொடர்ச்சி 16ம் பக்கம்பார்க்க.

ஜகத்குரு சங்கராச்சாரியசுவாமிகள்

"நீச" பாஷையில் பேசலாமா?

கண்ட சாஸ்திரியள், காணாத சாஸ்திரியள் சம்பாஷணை.

க:-என்ன சாஸ்திரிகளே நேற்று ஸனாதன கான்பரன்ஸுக்கு வந்திருந்தேளா?

கா:-நீங்கள் போயிருந்தேளே என்ன நடந்தது?

க:-அதை என்ன சொல்லச் சொல்றேள். ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாது. குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் செலவிருக்கும். பாயாஸம்பக்ஷணத்தோடு சாப்பாடையா?

கா:-எல்லோருக்குமா?

க:-எல்லோருக்குமில்லே இருந்தாலும் நான் விடுவேனா? சாப்பிட்டு விட்டேன்.

கா:-சாப்பாடு கிடக்கட்டும். அதைச் சொல்லி என் வயிற்றெறிச்சலை கிளப்பப் பார்க்கிறேளா. அங்கே என்ன நடந்தது. அதைச் சொல்லுங்கோ.

க:-முதல் நாள் ஸ்வாமியளவாள் மூனு மணி நேரம் இங்கிலீஷிலே ஜமாச்சுட்டாள். என்ன ஜோர்! என்ன ஜோர்!! நீங்கள் வராமலிருந்துட்டேளே.

கா:-உங்களுக்கும் எனக்கும் இங்கிலீஷிலே ஓர ... நரம்கூட தெரியாதே ஸ்வாமி. நான் வந்து என்னபண்ண. உங்களுக்கு எதனாலே அய்யா நன்னாயிருந்தது?

க:-ஸன்னிதானம் இங்கிலீஷிலே பேசறபோது அங்கேயிருந்த வக்கீல் ஸனாதனிகள் எல்லாம் ரொம்ப ரொம்ப ரெஸிச்சாள். அநேக இடங்களிலே சிரிச்சாள். சில சமயங்களிலே "ஹியர் ஹியர்" இன்னாள். அதினாலே நன்னாத்தானே இருந்திருக்கணும்.

கா:-என்ன அநியாயம! ஆச்சாரியாள் அதிலும் ஜகத்குரு, "நீச" பாஷையிலேயா ஸனாதனம் பேசறது! என்ன அக்கிரமம் "பறை"யன் கோவிலுக்குள் போனாக்கூட பிராயச்சித்தம் உண்டு. இந்த அதர்மத்துக்கு ஏதையா பிராயச்சித்தம். எல்லாம் புதுசு புதுசா வரப்பிலே இதுவும் ஒரு அபிநவ ஸனாதனம் போலிருக்கு!

க:-ராஜாவுக்கும் வைஸ்ராய்க்கும தெரியவேண்டாமா சாஸ்திரியளே?

கா:-நம்ம சாஸ்திரப்படி எந்த க்ஷத்திரியன் நமக்கு இப்போ ராஜாவாயிருக்கான் அவனிட்டே தெரிவிக்க. ஆச்சாரிகளும் சவுகர்யம போலே தர்மாசரணை செய்யலாமானால் காந்தியும சாஸ்திரத்துக்கு அர்த்தம் நன்னாய்ச் சொல்லலாம்.

க:- என்ன சாஸ்திரியளே அப்படியானால் பஞ்சமாள் எல்லாம் கோவிலுக்குள் போலாம் என்கிறேளா.

கா:- அப்படித்தான் சொல்றேன்.

க:- என்ன சாஸ்திரியளே. இதுவரை உங்களை ஸனாதனி என்றல்லவா நினைச்சேன். திடீரென ஹரிஜன சாஸ்திரியளாய் மாறிட்டேளே.

கா:- உமக்கு கண்ணிருக்கா அதோ பாரும் பூட்ஸ் காலோடே அந்த கிருஸ்தவரும் வாயிலே சுருட்டோடே அந்த முஸ்லிமும் த்வஜஸ்தம்பம் வரை போலாமானால் கட்டாயமாய் நம்ம பறையன் முத்தனும் சக்கி ... இவ்வளவு கொஞ்சதூரம் கூட உள்ளே போலாம் சாஸ்திரியாளே.

க:- (பதில் சொல்ல முடியாமல் விழித்துக்கொண்டு) சாஸ்திரியளே ரொம்ப கோபத்திலிருக்கேள். இப்போ உங்களிட்டே 'தர்மம்' பேசப்படாது. கோபம் படாதய்யா நான் போறேன்.

கா:- எனக்கு ஒன்றும் கோபமில்லே சாஸ்திரியளே எல்லாம் ஆசசாரியாளுக்கு த்தானிருக்கு.

க:- என்னய்யா ஸ்வாமிகளைப்பற்றி கண்டபடி பேசறேள்.

கா:- நான் ஒன்றும் அப்படி பேசவில்லை. அப்படி பேசறதெல்லாம் ஸ்வாமிகளும் நம்ப ஸனாதனிகளும் தான், நேத்து ஸ்வாமியளவாள் 1½ மணி நேரம் காந்தியை வாயில் வந்தபடி எல்லாம் வைதாளாம். எதற்காக ஸ்வாமி இனமொத்தரை வையணும்? தன் கக்ஷியில் பல மில்லாதவனதானே எதிரியை வைவான்- காந்தி என்ன பிராமணனை ஔபாஸனம் பண்ணக் கூடாது என்று கையை புடிக்கிறாரா? அதவ ப்ரமயஞ்யம் பண்ணக்கூடாது என்று கையிலே தீர்த்தத்தை விடுறாரா நாம பண்ணறது எல்லாம் அக்கிரமம். அசாஸ்திரீகம். எந்த சாஸ்திரத்திலே ஆய்யா ஆச்சாரியாளை மோடாரிலும், ரெயிலிலும் போகச் சொல்லிருக்கு? எந்த ஸ்மிருதியிலே, பிராமணனை வக்கீல் பண்ணச்சொல்லிருக்கு. கோர்ட்டிலே பஞ்சமன் ஜட்ஜா வந்தா அவனுக்கு மரியாதையோடு எழுந்து நின்று ஸலாம் போட்டு "யுவர். ஆனர், யுவர் லாட்ஷிப்" என்று சொல்ல எந்தச் சுருதியிலே சொல்லிருக்கு சாஸ்திரியளே.

க:- அதெல்லாம் ஆபத்தர்மம் அய்யா,

கா:- ஆபத்தர்மம் இது தானா லக்ஷக்கணக்காய்சம்பாதிச்சபிறகும் கூட இன்னும் ஆசை விடாமல் ராக்ஷஸ் ... பிசாசு (Vampire) மாதிரி ஜக்ஷிக்காரன் ரத்தத்தை உருஞ்சரது. இவர் தான் இப்போது இந்த ஆபத்தர்மம் நடத்திக்கொண்டு நம்மசனாதனத்தைக் காப்பாற்ற வந்திருக்காளய்யா. எல்லாம் பெரியவாளுக்கு ஒரு ஸனாதனம், ஏழைகளுக்கு தனிஸனாதனம் போலிருக்கு. கோவிலுக்குள் பஞ்சமனை மட்டுமா போகக்கூடாதென்று சொல்லிருக்கு? பதிதனும் போகக் கூடாதேஸ்வாமி. கோவிலிலே எத்தனை பதிதன் வாரான் தெரியுமா உமக்கு? நீங்கள் தினம் என்னய்யா பிராயச்சித்தம் பண்ணரேள். ஆகமசாஸ்திரப்படி கோவிலில் மூர்த்தியின் ஸான்னித்யம்போய் ரொம்ப நாளாயிருக்கணுமே? இந்த கோவில்களிலே பறையன் போய் என்னய்யா குறையப்போறது? இன்னம் ஒரு விஷயம் அதையும் கேளும், என்னிக்கிநாம் ஸமஸ்கிருதத்தை கேவலமாய் எண்ணி பர பாஷையை பெரிசாய் நினைத்து நம்ம குழந்தைகளை வாசிக்க வச்சோமோ அன்னிக்கி துலைந்தது நம்மஸனாதனமும், நம்மபிராம்ண்யமும். மனுஸ்மிருதி 2வது அத்தியாயம் 168வது ஸுலோகத்திலே 'எந்தத்துவிஜன்' (பிராம்ண, க்ஷத்திரிய வைசிஜன்) வேதாத்யாயனம் பண்ணாமல் மற்றதைப்படிக்கிறானோ அவன் அதே ஜன்மத்திலேயே வெகுலேசாக குடும்பத்துடன் சூத்ரனாய்விடுகிறான். ஆகையால்நாம் எல்லோரும் சூத்ரர்கள் தான். அஸெம்பிளியிலே ரெங்கய்யர் கொண்டு வந்த பில் (Bill) ரொம்பசரி. ஓய் சாஸ்திரிகளே இன்னும் கேளும்-

மகாபாகவத்திலே ஏகாதச சகந்தத்திலே ஸ்ரீதார் சொல்லுகிறார் "நோச்சுரேத் யாவனீம் பாஷாம் பிராணை கண்ட கதைரபி" அதாவது பிராம்ணன் அதாவது பிராம்ணன் கழுதத்துக்கு வந்தாலும் [A. B, C.] என்றுஉச்சாரணம் பண்ணக்கூடாது என்று அர்த்தமில்லையா? இப்போது இங்கிலீஷ் உச்சரிக்காத பிராம்ணன் எங்கே ஐயா இருக்கான்? ஸ்ரீ ஆச்சாரியாளுக்கு இப்போ நீங்கள் ஏற்படுத்தி இருக்கிற மஹத்வம் யவண பாஷா பாண்டித்யத் துக்காக தானே?

க;-இதெல்லாம் ஏனய்யா பேசறேள். பிரகிருத சர்ச்சை தீண்டாமையைப் பத்தித்தனே. பின்னே பிராமணன்என்ன செய்யணும் என்கிறீர்?

கா: இப்போது இவ்வளவுஸனாதனம் பேசறவாள் சாஸ்திரப்படியே நடந்து காட்ட வேண்டியது முன்பு பட்டாடை கட்டிக்கொண்டிருந்த இங்கிலீஷ் படித்த பிராமணாள் இப்போது பஞ்சகவசம் கட்டிக்கொண்டும் சாந்துக்கு பதில் வீபூதியும் குங்குமமும் போட்டுங்கொண்டும் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டோ அல்லது சீட்டாடிக்கொண்டோ காந்தியை வைதுகொண்டு பழய தொழில்களை விடாமல் நடத்திக்கொண்டு வந்தால் அது ஸனாதனமாகாது. முதலாவது, ஆச்சாரியாள் இங்கிலீஷைமறக்கணும் வக்கில் ஸனாதனிகள் வக்கீல் தொழிலை விடணும். ஸ்ருதி ஸ்மிருதி புராண இதி காசங்களை பாரதட அத்தியாபனம் யாகம் பிரதிக்ரஹம் இவைகளைக் கொண்டு உஜ்ஜீவிக்கணும் அவாள் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் சொல்லிக்கொடுக்கக் கூடாது. அப்படி அவர்கள் நடக்கத் தயாரில்லாவிட்டால் அவாள் ஸனாதனத்தைப்பற்றி பேசக் கூடாது தெரியுமா?

"வீரகேசரி"

ஜெர்மனியிலுள்ள கலியாணத்தரகர்கள் ஓர் சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். அவர்கள் நடாத்தி வைக்கிற ஒவ்வொரு கலியாணத்திற்கும் பவுன் ஒன்று முதல் பத்துவரை தரகுக்கூலி வாங்கப்படுகிறது. இத்துடன் ஸ்ரீதனப் பொருளில் 100க்கு 2வீதமும் இத்தரகர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

ஆலை முதலாளிகளும், தொழிலாளர்களும்.

[தோழர் சே. தே. நாயகம்]

பம்பாய் முதலான இடங்களில் ஆலைகளில் வேலை நிறுத்தம் நடப்பதையும், அதனால் முதலாளிமார்கள் வருவாய் குன்றிச் சங்கடப்படுவதையும், தொழிலாளர்கள் வேலையின்றிச் சங்கடப்படுவதையும், ஒரே தொழிலை நம்பியுள்ள இருவர்களும் ஒருவருக்கொருவர் நட்புப் பாராட்டித் தங்கள் பொதுத் தொழிலைவலுப்படுத்தி வெளி நாட்டாரோடு போட்டி போடத் திறமை தேட வேண்டிய காலத்தில், ஒருவர் நலத்திற்கும், உயிருக்கும்கேடு வரும்படி இன்னொருவர் முயலுவதையும் பார்த்தால், அப் போரில் ஈடுபட்டவர்கள் எல்லாரும் அறிவை யிழந்துவிட்டார்களோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது. ஒருவரையொருவர் வெறுத்து ஒருவருக்கொருவர் கேடு தேடுவது தங்கள் இருவருக்குமே கேடு தேடிக்கொள்வதாகும், என்ற அறிவு இருவருக்கும் தட்டாமற்போனதால், இருவரிலும் சேராத வெளியார் உண்மையை ஆய்ந்து சொல்வது அவர்கள் கடமையாகும். அந்தக் கடமையை மேற்கொண்டு இருவர் நிலைமையையும் ஆராய்வோமாக.

2. ஆலையைவைப்பதற்கும், ஆலையை நடத்துவதற்கும் முதலாளிமார்கள் முதல் போட்டிருக்கிறார்கள், அந்த முதலுக்குத் திட்டமான நியாய வருவாய் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை கிடைக்க வேண்டுமென விரும்புகிறார்கள். அப்படி விரும்புவதில் தவறொன்றுமில்லை. இந்த ஆலை தனி உடைமை முதலாளிகளுடையதாக இல்லாமல் பொது உடைமைப் பொருளாக இருந்தாலும், பொது உடைமை ஆலையில் முடக்கியிருக்கிற முதலுக்குக் குறிப்பிட்ட ஒருவரும்படி வந்துகொண்டு இருக்கத் தான் ஏற்பாடு செய்வார்கள். உடனே செலவிடப் படாது சேமித்து வைக்கப்பட்ட தொழிலின் பலனே முதலாகும். அவ்வித முதல் இல்லாவிட்டால் பெருந் தொழில்களைத் துவக்கவாவது, நடத்தவாவது முடியாது. பொது உடைமை ஆட்சியிலும் முதல் உண்டு. நம் நாட்டில் இருப்பது போன்ற தனி உடைமையில் அம் முதல் சில முதலாளிமார்களுடையது; பொது உடைமையில் அம் முதல் நாட்டிலுள்ளோர் எல்லாருக்கும் சொந்தத்தைக் காட்டும்படி ஆட்சியாளருடையதாயிருக்கும். இதுவே இரண்டிற்கு முள்ள வேற்றுமை. முதலுக்கு வருவாய் தேட வில்லையானால் அது விரைவில் ஒன்றுமில்லாதபடி கரைந்து விடும். முதலைக் காப்பாற்றுவதற்காகவாவது வருவாய் வேண்டும். ஆகையால் மேலே சொன்ன மாதிரி ஆலை முதலாளிமார்கள் வருவாய் தேடுவதில் தவறுதல் ஒன்றும் இல்லை. அது நியாயமே ஆகும். ஒவ்வொரு ஆலையிலும் தொடர்பு உடையவர்கள் மூன்று வகையினர். முதலிட்ட முதலாளிமார் ஒருவகையார். அதில் வேலை செய்கிற தொழிலாளர்கள் இரண்டாவது வகையார். அந்த ஆலையில் உற்பத்தி யாகும் சாமான்களை விலைக்கு வாங்கி உபயோகப்படுத்துகிறவர்கள் மூன்றாம் வகுப்பார். மற்ற இருவர்களுடைய நலத்தையும் கெடுக்காமல் முதலாளி மார்கள் தங்களுடைய முதலுக்கு வருவாய் தேடிக்கொள்வதில் எவ்விதத் தடையும் இருக்க வேண்டியதில்லை. உற்பத்தியாகிற பொருளின் விலையை அளவுக்கு மிஞ்சிக் கூட்டுவதும், அல்லது அப் பொருளின் தரத்தை அளவுக்கு மிஞ்சிக் குறைப்பதும், முதலாளி மார்கள் உற்பத்திப் பொருளை வாங்குபவர்களுக்குச் செய்யக் கூடிய கேடாகும். முதலாளிமார்களுக்குள் போட்டி இருப்பதாலும் உற்பத்திப் பொருளை வாங்குபவர்களின் தொகுதி மிகப் பெரியதாகையாலும், வாங்குபவர்களுக்கு ஆட்சியில செல்வாக்கு இருக்கிறபடியாலும், முதலாளிமார்கள் அவர்களுக்குக் கெடுதி செய்வது எளிதில தடுத்து விடப்படுகிறது. தொழிலாளர் சம்பளத்தைக் குறைப்பதும், வேலை நேரத்தைக் கூட்டுவதும், அவர்களின் மற்ற நலங்களைப் புறக்கணிப்பதும் முதலாளிமார் அவர்களுச் செய்யக் கூடிய கேடாகும். தொழிலாளர்களுக்குள் போட்டியிருப்பதாலும், ஆட்சியில் அவர்களுக்கு நேரான போதிய செல்வாக்கு இல்லாமையாலும், தங்களுக்கு முதலாளிமார்களால் வரும் இடைஞ்சல்களை எளிதில் விலக்கிக்கொள்ள முடிகிறதில்லை. தங்களுக்குள் இருக்கிற போட்டியை நீக்கி ஒற்றுமையை உண்டுபண்ணவும், தங்கள் செல்வாக்கைப் பெருக்கவும், தொழிலாளர்கள் தங்கள் சங்கத்தின் மூலம் முயலுகிறார்கள். அச்சங்கங்களின் உதவியால் தங்களுக்குள்ள குறைகளைக் குறைக்கவும், தடுக்கவும், முயன்றும், அம் முயற்சியில் கொஞ்சங் கொஞ்சமாக வெற்றி பெற்றும் வருகிறார்கள்.

3. தங்களுடைய குறைகளை நீக்கவும், தங்கள் செல்வாக்கைப் பெருக்கவும் இன்னொரு உறுதியான வழியைத் தொழிலாளர்களுக்கு எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் பெரும் நோக்கமாகும். தொழிலாளர்கள் எல்லாரும் முதலாளிமார்களுமாகிவிடுவதே நான் எடுத்துக்காட்ட விரும்பும் உறுதியான எளியவழி. ஆலைகளில் பெரும்பான்மையானவை பலருடைய முதலால்தான் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள நூல், நெசவு ஆலைகளை எடுத்துக்கொண்டோமானல், அவைகளில் பெரிய பக்கிங்காம் கருநாடக ஆலையின் விடு முதல் ரூ 1 கோடி சொச்சம் ஆகும். அந்த ரூ. 1 கோடியே சொச்சமும், பங்கு ஒன்றுக்கு ரூ 100 வீதம் 10 லக்ஷம் சொச்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு அடுத்த பெரியது மதுரை ஆலை. அதன் விடுமுதல் ரூ 55 லக்ஷம் சொச்சம். அதன் பங்கு ஒன்றுக்கு 15 தான் விடு முதல். கோயம்புத்தூர் ஆலையின் விடுமுதல் கிட்டத்தட்ட ரூ. 20 லக்ஷம். இது பங்கு ஒன்றுக்கு ரூ. 100 ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றை மேற்பார்ப்பவர்கள ஐரோப்பிய முதலாளிமார்கள். நாட்டு முதலாளிமார்களின் ஆட்சியிலிருக்கிற சீதாராம் ஆலையின் விடு முதல் ரூ 12 லக்ஷம் சொச்சம், காளீஸ்வர ஆலையின் விடுமுதல் ரூ ஆறரை லக்ஷம். வசந்தா ஆலை, மலபார் ஆலை இவை ஒவ்வொன்றுடைய விடுமுதல் ரூ. 6 லக்ஷம். இவற்றின் பங்கு ஒவ்வொன்றும் ரூ. 100 தான். இந்தப் பங்குகள் அடிக்கடி கைமாறுகின்றன. அவற்றின் உடையக்காரர்கள் அவற்றை விற்பதும் புதியவர்கள் அவைகளை வாங்கிஉடையவர்களாவதும் அடிக்கடி நடைபெறுகின்றன. மதுரை ஆலைப்பங்கு ரூ. 30-க்கும், பக்கிங்காம் ஆலைப்பங்கு ரூ. 140,180-க்கும், காளீஸ்வரர் ஆலைப்பங்கு ரூ. 235க்கும், சீதாராம் ஆலைப்பங்கு ரூ 55க்கும், வசந்தா ஆலைப்பங்கு ரூ. 103க்கும், தற்காலத்தில் விற்கின்றன. இந்தப் பங்குகளை வெளியே விற்கிற விலைக்கு வாங்கக்கூடிய தொழிலாளர்கள் இருக்கலாம். அவர்கள் அப்படிவாங்கி முதலாளிமார்களாவது நான் சொல்லும்வழியில் முதல். படியாகும். அப்படிச்செய்ய முடியாதவர்கள தங்கள் சங்க மூலமாக முதலாளிமார்களைக் கலந்து பேசி ஆலைப் பங்குகளை பங்கு 1-க்கு ரூ. 10 ஆக மாற்றிக்கொள்ள ஏற்பாடு செய்யலாம். அப்படிச் செய்வதில் முதலாளிமார்களுக்கு எவ்விதத் தகராறும் இருக்க இடமில்லை. ரூ. 100 போட்டு ஒரு பங்கு வாங்கிவைத்திருக்கிற முதலாளி ரூ 10 பொறும்படியான 10 பங்கு உடையவராவர். ரூ. 1000 போட்டு ரூ. 100 வீதமுள்ள 10 பங்கு வைத்திருப்பவர் 10 வீதமுள்ள 100 பங்குக்கு உடையவராவர். தாங்கள் போட்டிருக்கும் பொருளில் ஒரு சிறுகாசு கூட அவர்கள் இழக்க வேண்டிவராது. இப்படி மாற்றிய பிறகு தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பங்காவது வாங்கிக்கொண்டு ஆலை முதலாளிமார்களுள் தாங்களும் ஒருவர் என உரிமை பாராட்டலாம். அப்படிப் பங்கு வாங்கும்படித் தொழிலாளர் சங்கம் ஒவ்வொரு தொழிலாளரையும் தூண்டி உதவி செய்யவேண்டும். அப்படி ஒவ்வொரு தொழிலாளருக்கும் போதியபங்குகள் எடுக்க இடமில்லையானல், முதலாளிமார்களை மறுபடியுங்கலந்து பேசித் தொழிலாளர் ஒவ்வொருவரும் போதியபங்கு வாங்குவதற்கான தொகையை ஆலை விடு முதலாகக்கூட்டவோ, அல்லது உள்ள விடுமுதலில் போதிய தொகையை தொழிலாளர் பங்குக்கென ஒதுக்கிவைக்கவோ, ஏற்பாடு செய்யலாம். இந்த ஏற்பாட்டிலும் முதலாளிமார்களுக்கு எவ்விதத் தகராறும் இருக்கவேண்டியதில்லை. அவர்கள் ஆலையில் போட்டிருக்கிற பொருளைப் பறித்து விடயாரும் முயலவில்லை. அவர்களைப்போலவே தொழிலாளர்களும் உதவி செய்ய முன்னுக்குவருகிறார்கள். ஆகையால் இத்தஏற்பாட்டை அவர்கள் விரும்பி வரவேற்கவேண்டும்.

4. இப்படியின்றிப் பொதுஉடைமை ஆட்சியில் முதலாளிமார்களிடம் இருக்கிற ஆலையைப் பிடுங்கித் தொழிலாளர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்யாராவது எண்ணினல், அது தவறான கொள்கையாகும். ஒரு காலத்தில் அமெரிக்காவில் வேலை செய்யும் மக்களை முதலாளிமார்கள் அடிமையாக வாங்கி விற்றுவந்தார்கள். நீடித்த காலக்கிளர்ச்சியின் பயனாகத் துரைத்தனத்தார் அந்த அடிமை வாணிபத்தை நிறுத்திவிட விரும்பினபொழுது அடிமைகளின் கிரயத்தொகையை அந்தந்த முதலாளிமார்களுக்குக் கொடுத்தே அந்த அடிமைகளை விடுதலைசெய்தார்கள். அதைப்போலவே முதலாளி மார்களிடமுள்ள ஆலைகளைத் தொழிலாளர்களின் உடைமையாக்குவதென்றால் முதலாளிமார்கள் போட்டிருக்கிறதொகையை அவர்களுக்குக் கொடுத்துவிடுவது தான் சரியான முறையாகும். அப்படி முதலாளிமார்களை முற்றும் விலக்கிவிட்டுத் தொழிலாளர்கள் மாத்திரம் ஆலையை ஒப்புக்கொண்டு நடத்துவதைவிட, இருவருங்கலந்து முதலாளிமார்களாகி ஆலையை நடத்துவது சிறந்தவழியாகும். முதலாவது தொழிலாளர் பணத்துக்குத்தக்கபடி சொற்பம் சொற்பமாகத் தனிமுதலாளிமார்களின் பங்கை வாங்கலாம். இரண்டாவது ஆலையைநடத்துவதில் முதலாளிமார்களுக்குள்ள நீண்டகால அறிவையும், திறனையும் செய்கையில் தொழிலாளர் கற்றுக்கொள்வதற்கு அவர்களுடைய கூட்டுறவு இன்னும் இருப்பது நல்லது. மூன்றாவது அவ்வாறு தனி முதலாளிமார்களும தொழிலாள முதலாளிமார்களும் சேர்ந்து ஆலையை நடத்துவதில் ஆலையின் நிலைமை எப்படி இருக்கிறது என்று செய்கையில் அறிந்து அந்தக் கூட்டு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

பாட்னு முடிவுகள்.

ஸர் முகமது இக்பால்

அஸோஸியேடெட் பிரஸ் நிருபர் ஸர் முகமது இக்பால் முகமதுவை பேட்டி கண்டுபேசிய பொழுது அவர்கூறியதாவது:- காங்கிரஸ் வகுப்புத் தீர்ப்பைஎதிர்க்கக் கூடாது. வகுப்பைத் தீர்ப்பைஎதிர்ப்பதால் ஹிந்து முஸ்லிம்களுள் உள்ள பிளவு அதிகரிக்கும். எனக்கு சுயராஜ்யக் கட்சியினரைப் பற்றி அதிக நம்பிக்கை யில்லை.

அபேத வாதக் கட்சியினர் பாட்னுவில் தோல்வியுற்ற போதிலும் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல ஸ்திதிக்கு வருவார்கள் என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். ஆனால் அது காங்கிரஸிலிருந்து பிரிவதைப் பொறுத்தே எதிர்காலத்தில் நன் நிலைமைக்கு வருவதிருக்கிறது. தேசத்தில் பணக்காரவகுப்பினருக்குவிரோதமானக் கலகம் கிளம்ப வேண்டுமென்ற பொது உணர்ச்சி இருந்து வருகிறது. ருஷ்யர்களது பிரசாரத்தால் தான் இந்தியாவில் அபேதவாத எண்ணங்கள் தோன்றி யிருக்கின்றன என்று நினைப்பது தவறாகும் முக்கியமான பொருளாதார மாறுதல்களைச் செய்ய தேசத்தில் பல சக்திகள் வேலை செய்து வருகின்றன.

ஹிந்து மகாசபைபக்காரியதரிசியின் அபிப்பிராயம்.

(அ. பி. ஸ்பெஷல்)

ஹிந்து மகாசபை பொதுக் காரியதரிசியான பாபு ஜகத் நாராயணலால் பின் வருமாறு கூறினார்:—சட்டமறுப்பு நிறுத்தத்தை அங்கீகரித்து, பார்லிமெண்டரிக் கிளையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை விவேகமான முறையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மேற்கொண்டது. இதன் மூலம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தேசத்திற்குத் தக்க சமயத்தில் சரியான வழியைக் காட்டியது. ஆனால், காங்கிரஸ் சட்டசபைவிவகாரபோர்டின் முறையையும், திட்டமாக வேலைத் திட்டத்தையும் நிர்ணயிக்காமல் வழவழ வென்று விட்டு விட்டது வருந்தத் தக்கதாகும்.

ஜனாப் ஜின்னாவின் அபிப்பிராயம்.

(அ. பி. ஸ்பெஷல்)

ஜனாப் முகமதலி ஜின்னாவைக் கண்டு அஸோஸியேடெட் பிரஸ் நிருபர் பேசிய பொழுது அவர் கூறியதாவது:—வேறு திருப்திகரமான ஏற்பாடு இல்லாததினால் தான் முஸ்லீம் லீக்கின் நிர்வாக சபை வகுப்புத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தியா ஒற்றுமையுடனிருந்தாலொழிய முன்னேற்றமெதுவும் ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. இது மட்டுமின்றி சீர்திருத்த அதிகாரமும் குறைக்கப்படக் கூடும்.

மகாண சுயஆட்சி சம்பந்தப்பட்டமட்டில் எவரும் சீர்திருத்த அறிக்கையில் கண்ட திட்டம் தற்பொழுதுள்ள அரசியலை விட முன் செல்ல வில்லை. கவர்னர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் விசேஷாதிகாரங்களும் 2வது சபையை ஏற்படுத்தும் பிரரேபணையும் தான் ஆட்சேபகரமானவையாகஇருக்கின்றன.

சமஷ்டி அமைப்புசப்கமிட்டி நடவடிக்கை ஆரம்பமானது முதல் நான் சமஷ்டித்திட்டத்தை எதிர்த்து வந்திருக்கின்றேன்.

சமஸ்தானாதிபதிகள் சமஷ்டியில் சேருவது சம்பந்தமான பிரரேபணைகளை நான் ஆட்சேபித்து வந்திருக்கிறேன்.

ஸ்ரீமான் டால்வின் அபிப்பிராயம்

ராஞ்சியில் எந்தத் திட்டத்தின் மேல் சுயராஜ்யக்கட்சித் திரும்ப ஆரம்பிக்கப்பட்டதோ அந்தத் திட்டம் மெதுவாக கை நழுவவிடப்பட்டிருக்கிறது. சீர்திருத்த அறிக்கையை நிராகரித்தால் அடக்குமுறைச்சட்டங்களை ரத்து செய்தல், வகுப்புத் தீர்ப்பைத் தற்காலிகமான முறையில் ஏற்றுக்கொள்ளுதல் முதலியனவும் ராஞ்சித்திட்டத்தில் அடங்கியிருந்தன. தற்பொழுது அத்திட்டத்திற்குப் பதிலாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின், நிமிஷத்திற்கு நிமிஷம்மாறக்கூடிய உத்திரவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் மெம்பர்கள் இந்தியா சட்டசபை வாக்காளரது ஆதாவுகளைக்கோருவார்கள். அவர்கள் வாக்காளருக்கு ஜவாப்தாரியாக இருக்கமாட்டார்கள். ஆனால் வெளி ஸ்தாபனமான அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உத்திரவுக்கிணங்க அவர்கள் நடக்கவேண்டியவர்களாக இருப்பார்கள். இதனால் வாக்காளர்கள் காங்கிரஸ் அபேக்ஷகர்களது வேண்டுகோளை ஏற்க மறுப்பது நியாயமாக இருக்கும். தேசத்தில் இதர கட்சிகள் இருக்கின்றதென்பதையும்அவை தமது லக்ஷியங்களுக்கும் முறைகளுக்குமிணங்கிய முறையில் தேசத்தின் கதியை நிர்ணயிக்க உரிமை பெற்றிருக்கின்றன என்பதையும் காங்கிரஸ் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். காங்கிரஸ் தனித்திருக்கும் உணர்ச்சியைக்கொண்டிருக்கிறது. இதனால் வரப்போகும் தேர்தலில் இதர கட்சியினர் போட்டிக்கு அபேக்ஷகர்களை நிறுத்தி மனஸ்தாபத்தையும் பிளவையும் அதிகரிப்பார்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் முக்கியமான பிரச்சினைகளில் சர்வாதிகாரிகளைப் போன்று பிறருக்கு ஆக்ஞை பிறப்பிக்கும் மனோ பாவங்கொள்ளக் கூடாது.

சர்க்கார் இந்தியா சட்டசபையைக் கலைத்து சுயராஜ்யக் கட்சி ஏற்படுவதற்கு வசதி செய்திருக்கின்றனர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சீர்திருத்த அறிக்கையையும் வகுப்புத் தீர்ப்பையும்பற்றி மௌனஞ் சாதித்திருக்கிறது. இவற்றை யெல்லாம் பார்த்தால் இதில் ஏதோ மர்மமிருக்கிறது. இது பின்னால்தான் தெரியும் போலிருக்கிறது.

சு. மி.

சாரதா மில்.

தோழர் V. S. செங்கோட்டையா அண்டுபிரதர்ஸ் மேனேஜிங் டைரக்டர்ஷிப் நிர்வாகத்தின் கீழ் நடத்த ஏற்பாடு செய்திருக்கும் சாரத மில்ஸ் லிமிட்டட் கம்பெனி 25-5-34 மாலை5மணிக்கு கோவை போத்தனூரில் மில் இடத்தில் தோழர் சர். R. K. ஷண்முகம் K.C.I.E. அவர்களால் கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது.

அவ் விழாவுக்கு உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள் ஐரோப்பிய கனவான்களும் சேட்டுமார்களும் அனேகர்விஜயம் செய்திருந்தார்கள். ஆங்கிலமுறையில்சிறப்பான சிற்றுண்டி விருந்து நடந்தது. தோழர் A. T. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் டைரக்டர்கள் சார்பாக சர். ஷண்முகம் அவர்களுக்கு வரவேற்பு பத்திரம்வாசித்துக்கொடுத்தார். அதற்கு பதிலளிக்கு முறையில் தோழர் ஷண்முகம் மில் முறைகளைப் பாராட்டி தோழர் செங்கோட்டையா அவர்கள் வியாபாரத் திறமையையும் அறிவையும் பாராட்டியும் இப்படிப்பட்டவர்களால் நடத்தப்படும் மில் மற்றவர்களால் நடத்தப்படுவதை விட மேன்மையாயும் லாபகரமாயும் நடை பெறுமென்றும் வரவேற்பு பத்திரத்தில் முதலாளி தொழிலாளி விஷயம் குறிப்பிட்டிருப்பதால்அதைப்பற்றிதோழர்கள் Dr.P. வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் இங்கு இருக்கும்போது அவர்கள் முன்னிலையில் பேசுவதற்கு பயமாய் இருக்கின்றது என்றும், ஆனாலும் வெள்ளைக்காரர்களைவிட இந்தியர்கள் தொழிலாளர்கள் விஷயத்தில் தாராள நோக்கமாக இருப்பதாகவும், இன்னமும் தாராளநோக்கமாக இருந்து தொழிலாளிகள் நன்மைகளைப்பற்றி கவனிப்பதுதான் தொழில் வளர்ச்சிக்கு ஆதாரம் என்றும், அதிக மில் ஏற்படுவது நன்மை யென்றும், வெளிநாட்டிலிருந்து துணியோ, நூலோ வரவேண்டிய அவசியமில்லாத அளவுக்கு இன்னமும் மில்லுகள் ஏற்படவேண்டுமென்றும், இந்த மில் மென்மேலும் வளர்ந்து தென்னிந்தியாவுக்கு ஒரு முக்கிய தொழிற்சாலையாக வேண்டுமென்று விரும்புவதாகவும் சொல்லி பொற்கரண்டியில் சுண்ணாம்பு வாரி வைத்து, அதன் மேல் கல்லை வைத்து பொற் சம்மட்டியால் பெருத்த கரகோஷத்தினிடையே தட்டினார். விழா வெகு சிறப்பாகவே இருந்தது.

விவாகம்.

ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் E. O. C. முத்துசாமிக்கவுண்டர் அவர்கள் குமாரத்தி தனத்துக்கும் கோவை தோழர் C. V. ராமசாமி முதலியார் குமாரர் திருநாவுக்கரசுக்கும் கோவை மணமகன் வீட்டில் 25ந்தேதி திருமணம் வெகு சிறப்பாய் நடந்தது. ஜில்லாவின் பல பாகங்களில் இருந்தும் உள்ளூரிலிருந்தும் அனேக பிரபலஸ்தர் விஜயம் செய்திருந்தார்கள். திருவீழி மழலை சகோதரர்கள் மேளக்கச்சேரி நடந்தது.

கும்பகோணம்.

சுயமரியாதை வாலிபர் சங்கம்:—ஷை சங்கத்தின் வாரந்திரக் கூட்டம் 6-5-34ந் தேதி தோழர் எஸ். சுப்பராவின் தலைமையில் தோழர் ஜீ. ராமையா அவர்கள் சமூக முன்னேற்றம் என்பது பற்றிப் பேசினார்.

13-5-34ந் தேதி மாலை தோழர் எஸ் ஜீ. வெங்கிட்டராமன் தலைமையில் என். குமரர். சி. சாமிநாதன் முதலியவர்கள் பெண்கள் முன்னேற்றம் என்பது பற்றிப் பேசினார்கள்.

20-5-34ந் தேதி தோழர் பி. ஆத்மநாதன் அவர்கள் தலைமையில் தோழர் கே. ஆர். சுப்பிரமணியம் தற்கால, முற்கால அரசியல் நிலைமை என்பது பற்றியும், தோழர் சி. சாமிநாதன் தற்கால அரசியல் நிலையும், பாட்னா காங்கிரசில் வரவிருக்கும் சமதர்மத் திட்டமும், என்பது பற்றிப் பேசினர்.

தஞ்சை

சுயமரியாதைச் சங்கம்:—ஷை சங்கத்தினாதரவில் 21-5-34ந் தேதி ஒரு பொதுக் கூட்டம் தோழர் ஆளவந்தான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் எஸ். ஆர். சுப்பண்ணா அவர்கள் "புரோகித புரட்சி" என்னும் பாட்டுப்பாடினர். பின் தோழர் கே. முத்தசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் "மதமும், கடவுளும், மக்களுக்குக்கேடு" என்பதுபற்றி ஒரு அரிய உபந்யாசம் செய்தார்.

சோஷலிசம்.

(சமதர்மம்)

கட்டுரை 3.

[சோஷலிஸ்ட்]

(இக்கட்டுரையில் சோஷியலிசத்தின் பொருள், நோக்கம் முதலியனவும், சோஷியலிசத்தைப் பரப்புவதற்கு செய்யவேண்டிய நடைமுறை யோசனைகளும் தெளிவுபடுத்தி விளக்கப்பட்டிருக்கிறது. ப-ர்.)

'சோஷலிசம்' பல்வேறு அமைப்பில் இருக்கின்றன. அதன் பொருள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதமாக விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 'சோஷலிசம்' என்பதற்கு குறுகிய வார்த்தைகளால் வியாக்கியானம் சொல்லி விளங்க வைப்பதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. சமுதாயத்தின் ஏகோபித்த கூட்டு அமைப்பு முறையை குறிக்கோளாகக்கொண்ட ஸ்தாபனமே சோஷலிசமென்று நாம் சொல்லக்கூடும். அது பொது ஜனங்களுடைய முழு நலனேயும் துணையாகக்கொண்டதாகும். அது தனிப்பட்டவர்கள் சொத்துரிமைக்கும் தனிப்பட்டவர்கள் உற்பத்தி பொருள்களின் ஆக்கத்திற்கும் அதன் வினியோகத்திற்கும் எதிரிடையானதாகும். சோஷலிசம் என்கிற வார்த்தையின் உட்பொருளை சரியாக உணராமலேயே அநேகர் தங்களை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக்கொள்கின்றார்கள். ரயில்வேக்கள்... முதலியவற்றை அரசாங்கத்திற்கு சொந்தமாக்கி விடுவதே அதுவும் அந்தநிர்வாக ஸ்தாபனத்தின் உச்சஸ்தானத்தில் இருப்பவர்கள் கனத்த முதலாளிகளாகவும்-பழுத்த பிரபுத்வ மனப்பான்மை கொண்டவர்களாகவும்இருந்தபோதிலும்கூட, அதை சோஷலிஸ்டு முறை என்று சிலர் நினைக்கிறார்கள். காரல் மார்க்ஸ் சாஸ்திரீக சோஷலிசத்தை "Scientific socialism" ஸ்தாபிதம் செய்த அக்கால முதல் இன்றுவரை சோஷலிசத்திற்கு அநேகர் அநேகவித வியாக்கியானங்களையும், தத்துவார்த்தங்களையும் சொல்லி வருகிறார்கள். மார்க்ஸ் தத்துவப்படி, முதலாளித்வ அடிமைக்கட்டுப்பாட்டிலிருந்து தொழிலாளர் சமூகம் விடுதலை பெற நிகழ்த்தும் போராட்டமே, சோஷலிசமாகும். இது சகல மக்களுடைய முழு நலனையும் தனனுள் கொண்டு, எந்தவித பேதாபேதமுமற்ற ஜனசமுதாயத்தை ஸ்தாபிப்பதே அதன் வேலையாகும். மற்றும் அது கொடுமைப் படுத்தப் பட்ட கீழ்த்தரப்பட்டவர்களென்போர்-கொடுமையாளரான உயர்ந்தவகுப்பாரென்போரை வீழ்த்தி சரிநிகர் சமமான சமுதாயத்தை சரி நிகர் செல்வ நிலை அந்தஸ்தோடும் அமைப்பதாகும்.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த காரல் மார்க்சும் பிரடெரிக் என்ஜல்சும் வருங்காலத்தைப்பற்றிய ஞானம் படைத்தவர்களாக இருந்ததோடு, அவர்கள் சோஷியலிசத்தின் முக்கிய தத்துவங்களையும் நன்கு விளக்கி வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அவர்கள் முறைப்படி ஓரளவுக்கு ரஷ்யாவில் சோஷியலிசம் வேலை செய்திருக்கிறது. நாம் அதனால் சோஷலிஸ்டு அரசியல் அமைப்பு சவிஸ்தார முறைகளை பரிசிலனை செய்யவும் கூடும். உற்பத்திப்பொருளின் சாதனங்களெல்லாம் கூட்டுறவு முறையில் அமைக்கப் பெற வேண்டுமே யன்றி, தனிப்பட்டவர்களுக்கல்ல என்பதே சோஷலிசத்தின் முக்கிய தத்துவமாகும். எவருக்கும் நிலமோ, அல்லது இயந்திர சாதனங்களோ சொந்தமாக இருக்கக் கூடாது. எல்லா நிலங்களும், எல்லா இயந்திர சாதனங்களும் (மெஷின்களும்) சர்க்காருக்கே சொந்தமாக வேண்டும். மற்றும் இது போலவேஅரசியலின் ஒவ்வொருஅமைப்பு முறையிலும், கைத்தொழிலின் ஒவ்வொரு பிரிவிலும், இன்னும் மற்ற விஷயங்களிலும் தொழிலாளர் வகுப்பார்களுடைய தாழ்ந்தவிருப்பப்படியேதான் சர்க்கார் நிர்வாகம் செய்ய வேண்டும்.

கால்வாசி சோஷலிஸ்டுகள், அரைவாசி சோஷலிஸ்டுகள் முக்கால் வாசி சோஷலிஸ்டுகள் 100-க்கு 99-பங்குள்ள சோஷலிஸ்டுகள் ஆகியவர்களைப்பற்றி நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாம் நேரடியான சரியான சோஷலிஸ்டுகளை நம்மோடு சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். பல திறப்பட்ட தொழிலில் சம்பந்தப்பட்ட மக்கள் அவரவர்களுக்குச் சொந்தமான வஸ்துக்களை நிர்வகித்துக் கொள்ள வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு நகரத்திற்கும் அதனதனுடைய சொந்த சொத்து இருக்க வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் ஒவ்வொரு தேசத்திற்கும் அதனதன் சொத்து இருக்க வேண்டுமென்கிறார்கள். இவ்விதமாக நூற்றுக்கணக்கான சோஷலிஸ்டுகளும் பெயரளவு சோஷலிஸ்டுகளும் இருக்கின்றனர். நாம் இவர்களை எல்லாம் ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும். பொது மக்களிடையே முழு உரிமை ஆக்கமே தேவை. இதற்குக் குறைந்த எதனாலும் பொது மக்களைத் திருப்தி படுத்த முடியாது. சோஷலிசத்தை நம்முடைய நாட்டில் மாத்திரம் நிலைநிறுத்துவதில் வெற்றிபெற்று விட்டால், தாழ்மையான தொழிலாள மக்களுக்கே சகல உற்பத்திப் பொருள்களின் சாதனங்களும், அதன் வினியோகங்களும் அவர்கள் கையிலேயே இருக்கவேண்டும். உலகம் பூராவும் பொதுவுடமையை ஸ்தாபிதம் செய்ப சந்தர்ப்ப மேற்பட்டு விட்டால், நாம் உலகம் பூராவினுடைய சரிநிகர் பாத்திய உரிமையை—ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்தில் உள்ள அழுக்கடைந்த நீக்கிரோக்களுக்கோ அல்லது துருவங்களிலுள்ள அடியோடு ஒதுக்கித் தள்ளப்பட்ட எஸ்கிமோசுக்கோ வழங்க நாம் சிறிதும் முணுமுணுக்கக்கூடாது. எவருக்கும், ஏன்?-இறந்து பட்ட காரல் மார்க்ஸ் உயிர் பெற்று வந்தாலும் அவருக்கும், எந்த அதிக உரிமை பாத்தியதையும் கிடையாது.

எல்லா உற்பத்தி பொருள்களின் சாதனங்களையும் ஏகோபித்த கூட்டுறவு முறையில் சொந்தமாக்குவதோடு மாத்திரம் சோஷலிசம் நின்று விடுவதில்லை அது சரிசமதையாக வினியோகப் படுத்துவதில் அதிகம் முனைந்து நிற்கிறது. சோஷலிசத்தின் முக்கிய கொள்கையானது தேவையையும் துயரத்தையும் போக்குவதேயாகும். அது சமுதாய ஜாதி பேதங்களையும் வகுப்புகளையும் ஒழிப்பதோடு எல்லோருக்கும் சரிபங்கு வழங்குவதே அதன் தன்மையாகும். சோஷலிஸ்டுகள், எல்லோருக்கும் சரிசம பாத்தியதையான செல்வத்தையும் ஒரே நிகரான அரசியல் பொருளாதார உரிமையையும், பேதமற்ற சம அந்தஸ்துள்ள சமுதாயத்தையும் விரும்புகிறார்கள்.

சகல உற்பத்திப் பொருள்களின் சாதனங்கள் அனைத்தும் பொதுவுடமையாக்கப் படுவதால், அதனுடைய மொத்த விளைவுகள் அதிகரிக்கும். அதோடு சகலருக்கும் அதிக சௌகரியமும், அதிக சந்துஷ்டியும் அதிகரிக்கும். மனிதன் ஒரு பேராசை மிருகமாகவும், தன்னலலக்ஷியங் கொண்டவனாகவும் திகழ மாட்டான். மனிதன் தனக்சாகவே வேலை செய்து வாழ்வதை விட்டொழிப்பான். அவன் சகலருக்குமாகவே வேலை செய்பவனாகி விடுவான். அவன் தன்னைப் பற்றி சிந்தனை செய்வதை விட்டொழித்து சகலரையும் பற்றி ஏகோபித்து சிந்தனை செய்வான். இது சம்பந்தமான கருத்துகளை வேறு தனி கட்டுரை மூலம் பரிசிலனை செய்து விளக்குவோம்.

இதுசமயம் எழுதப்பட்டு வரும்கட்டுரையின் நோக்கம் ஏழைத் தொழிலாளர்களுக்கு சோஷலிசத்தைப் புகட்டி சோஷலிஸ்டு அமைப்பில் அவர்களைக் கொண்டு செலுத்துவதே யாகும். நாம் நமது முடிவான லக்ஷியத்தை ஒளி மறைவாக வைக்க வேண்டியதேயில்லை.

பல் வேறு பட்டவர்களும்-மிககீழாக கொடுமை செய்யப் பட்டவர்களுமான தொழிலாளர்களை ஒன்று படுத்த எடுத்துக் கொள்ளும் முயற்சியில் தோழர் ஈ. வெ. ராமசாமி இறந்துபடலாம். தென்னாட்டிலுள்ள தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்கு முன்பு அதுவும் அவர்களுடைய அடிமைத்தன்மை—அறியாமை-அந்தகாரம்—மூடக்கொள்கைகள் முதலிய யாவும், மற்றும்சர்க்கார்நலனுக்காக கங்கணம் கட்டிக்கொண்டு வீறிட்டு நிற்கும் சமஸ்தானாதிபதிகள்-பிரபுக்கள் — நிலச்சுவான்தாரர்கள் [illegible] முதலாளித்வ ஆக்கங்கள்யாவும் பிறபோன்றதான நூற்றுக்கணக்கான சக்திகளோடு எதிர்த்துப் போராடவேண்டும். இந்தக் காரியமானது தோழர் ராமசாமி போன்ற லக்ஷக்கணக்கான

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

புரட்சி

ஈரோடு 1934- மே மீ 27-உ

சித்ரவதை 23 ஆடுகள் சித்ரவதை.

"மனித சமூகத்திற்காக என்று சில ஒழுக்கங்களையும், சிலநடவடிக்கைகளையும் ஏற்படுத்தி அவை கிரமமாய் நடந்தேறுவதற்காக பயத்தை உண்டு பண்ணும்படியான நிபந்தனைகளை கற்பித்து, அக்கற்பனைகளுக்குமதக் கொள்கை என்று பெயரிட்டு, அம்மதக் கொள்கைக்கு காப்பளிப்பதற்காக கடவுளை உண்டாக்கி வைக்கப் பட்டிருக்கிறது" என்பது மதத்திலும், கடவுளிலும் நம்பிக்கையுள்ள அறிவாளிகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும்கடவுள் மதக்காப்பாளர்களின் வாதமாகும்.

மேல்குறிப்பிட்ட ஒழுக்கமும் நடவடிக்கைகளும் நியாயமானதா பொதுவானதா அவசியமானதா என்பதைப் பற்றிய விவகாரத்தில் இப்போது நாம் தலையிடவில்லை என்றாலும், கடவுளுக்கும், மதத்துக்கும் காப்பளிப்பதற்காக இந்த அறிவாளிகள் சொல்லும் சமாதானம் சரியானதா விவகாரத்துக்கு நிறகக் கூடியதா? என்பதைப் பற்றியே நாம் இந்த வியாசத்தில் விவரிக்கிறோம்.

மனிதனுக்குள் புகுத்தப் பட்டிருக்கும் மதப்பித்தானது மதுவை உட் கொண்டவனுக்கு எப்படி அவன் சொந்த புத்தி மறைந்து அவசியமற்றதும், ஒழுக்கும் அறிவும் அற்றதுமான காரியங்களையே நினைக்கவும், பேசவும், செய்யவும் ஆளாகிறானோ, அதே போல் மத வெறியானது குறிப்பிட்ட அதாவது மனிதனுக்கு இருக்க வேண்டிய "ஒழுக்கம் நடவடிக்கை" என்பவைகள் லக்ஷிய மற்றதாகி வெறும் மத பக்தியே லட்சியமுடையதாகி அதற்காக வாழவேண்டியதையும், அதற்காக உயிர்விட வேண்டியதையும் மனிதனின் முக்கிய கடமையாக ஆக்கப் பட்டிருக்கிறது. இதை மதவாதிகள் உணர வேண்டுமானால் ஒவ்வொரு மத வாதியும் தன் தன் மதத்தைப பற்றி நினைக்காமல் தனக்குதெரிந்த வரையில்பிரமதக் கொள்கைப்படி உள்ள ஒழுக்கங்களையும்நடவடிக்கைகளையும்பிறமதக்காரன் பின்பற்றி நடக்கின்றானா என்பதையும் கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு மதக்காரர்களின்யோக்கியதையும், மற்ற மதக்காரர்களுக்குத் தெரியும். மற்றபடி அவரவர் மதக்குற்றம் அவரவர்களுக்குப் புலப்படாது.

ஒழுக்கம் நடவடிக்கைகள் என்பவை ஒரு மனிதன் உலக வாழ்க்கையில் ஜன சமூகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மற்ற மனிதனிடத்தில் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மற்ற மனிதன் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறான் என்பவைகளைப் பொருத்ததே ஒழிய, வெறும் வேஷம், சடங்கு ஆகியவைகளைப் பொருத்ததல்ல என்பதாக முடிவு செய்து கொண்டு பிறகு மேற் சொன்னபடி கவனித்துப்பார்க்க விரும்புகிறோம்.

இந்தப்படி பார்த்தால் எந்த மூடனுக்கும் மதம் பயனற்றது என்பதும், கடவுளை உண்டாக்கினதுவெரும்பைத்தியக்காரத்தனமென்பதும்மிக சுலபத்தில்வெட்ட வெளிச்சம் போல் விளங்கி விடும்.

உதாரணமாக, திருடுவதிலும் பொய்பேசுவதிலும், அன்னியனை வஞ்சிப்பதிலும், ஒரு பெண்ணை பலாத்காரமாய்த் தூக்கிச் சென்று துராக்கிருதப் புணர்ச்சி செய்வதிலும் தாராள நோக்கமுடைய ஒரு முஸ்லீம், என்பவன் ஒருவேளைதொழுகைதவறிவிடுவதையும், மந்திரம் சொல்லி அறுக்காத (ஜீவவதை செய்யாத) ஜெந்துவின் மாம்சத்தை சாபபிடுவதையும் பெரிய பாவமாகவும்மத விருத்த(விரோத)மாகவும் கருதுகிறான். சமூகமும் அப்படிப் பட்டவனைமுன்னையதை விட பின்னையதற்கே அதிகமாகவெறுக்கின்றது.

அது போலவே பொய்பிக்கும் அக்கிரமங்களுக்கும் அனுகூலித்து வாதாடி வயிர் வளாக்கும் வக்கீல் தொழில் செய்வதையும், லஞ்சம் வாங்கி அநீதி செய்து பொருள் சேர்த்து ஜீவிப்பதையும், பொய், புரட்டு, போர்ஜரி, திருட்டு முதலிய காரியங்கள் செய்வதையும், மது மாம்சம்அருந்தல் முதலிய "இழிவான" காரியங்களைச் செய்வதையுப்பற்றி வெட்கப்படாமல் இவற்றில் தீரனென்று தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ளும் ஒரு பிராமணன் என்பவன் தான் சிறிது நேரம் பூணூல் இல்லாமல்இருப்பதையும், நெற்றியில் சாம்பலோ மண்ணோ பூசிக்கொள்ளாமல் இருப்பதையும், இறந்து போய் மோட்சலோகத்தில் இருப்பதாய் கருதிக் கொண்டிருக்கும் தன் தாய் தகப்பன் என்பவர்களுக்கு திதி கொடுக்காததையும் பெரியதொரு பாதகமாகவும் மத விருத்தமாகவும்கருதுகிறான். சமூகமும் அவனை முன்னைய "இழி" தொழிலை விட பின்னைய "தவறு" தல்களுக்கே அதிகமாக வெறுக்கவும், பகிஷ்கரிக்கவும் செய்கின்றது.

அது போலவே லஞ்சம் வாங்குவதையும், மக்களை வேட்டையாடுவதையும், நிரபராதியான மக்களை ஆயிரக்கணக்காய் எறும்புகளையும், ஈசல்களையும் விடக்கேவலமாய் மதித்து ஒரு வெடியில் 1000, 2000 பேர்களை கொல்வதையும், தன் மதத்திலேயே மனிதனுக்கு மனிதன் கீழானவன், தீண்டத்தகாதவன் என்று எண்ணுவதையும், நடத்துவதைப் பற்றி வெட்கப்படாமல் இருக்கும் ஒரு கிறிஸ்தவன், ஒரு குறிப்பிட்ட வேளை கோவிலுக்குப் போகாததையும், இரண்டு பெண்டாட்டியை கல்யாணம் செய்து கொள்வதையும், கோவிலுக்கு போய் குருக்கள் முன்னிலையில் கல்யாணம் செய்து கொள்ளாததையும் பெரிய மதக் குற்றமாகவும், கடவுள் விரோதமாகவும் கருதுகிறான். சமூகமும் இப்படிப்பட்டவனை வெறுப்பதில்லை என்பதோடு, சில சமயங்களில் மதிக்கவும் செய்கின்றது. ஆகவே மதங்களின் மூலம் சடங்குகள் மதிககப் படுகின்றனவா? ஒழுக்கங்கள் மதிக்கப்படுகின்றனவா? என்பதை உணரலாம்.

ஆரிய மதமானது ஜீவகாருண்யத்தையும் அஹிம்சையையும சர்வம் பிர்மமயம் என்னும் தத்துவத்தையும் உண்மை அருத்தத்தில் அஸ்திவாரமாகக் கொண்டது என்று ஆரியர்களும் அவர்களது அடிமைகளும் சொல்லுகிறார்கள். ஆனால் அனுபவத்தில் வார்த்தை அளவில் கூட ஜீவகாருண்யமோ, அஹிம்சையோ காண்பது கஷ்டமாய் இருக்கிறது. மனிதர்களை மனிதர்கள் மதிக்கும் தன்மையிலும் நடக்கும் இக்குணங்கள் காணப்படுகின்றனவா என்பதை கவனித்தால், ஆரிய மதத்தின் போக்கியதை யெவருக்கும் விளங்காமல் போகாது. இவ்வாரியர்களின் மற்ற காரியங்கள் எப்படி இருந்தாலும், மதத்திற்காக மதக் கொள்கைப்படி செய்வதாய் சொல்லப்படும் சில காரியங்களில் எவ்வளவு கொடுமையும் வன்னெஞ்சமும் இருக்கிறது என்பதைக் காட்ட சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த யாகம் என்று சொல்லப்படும் காரியத்தைப் பற்றி பொது ஜனங்களுக்குஅறிவிக்கவே இதை எழுதுகிறோம்.

இம்மாதம் 22ந் தேதி கும்பகோணத்தில் ஆரியர்கள் ஒரு யாகம் செய்தார்களாம். அந்த யாகத்தில் 23 ஆடுகள் "மோட்ச" லோகத்திற்கு அனுப்பப் பட்டனவாம். எப்படி அனுப்பப் பட்டன என்றால், உயிருடன் அவ்வடுகளின் வெதர்களைப் பிடித்து நசுக்கி அவற்றைக் கொன்று அனுப்பப் பட்டனவாம். என்ன அக்கிரமமான காரியம் என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டுகின்றோம். ஜந்துக்களுக்கு பீஜம் அல்லது வெதர் என்பது மிகவும் மெல்லியதும் சிறிது அடி பட்டாலும் அதிக நோயை உண்டாக்குவதென்பதும், ஆரியர்கள் உள்பட யாவரும் உணர்ந்த காரியம். அப்படி இருக்க 23ஆடுகளை பீஜத்தைப் பிடித்து நசுக்கி அவைகளை சாகடிப்பதென்றால், அந்த 23 ஆடுகளும் எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமா?

இப்படி சித்திர வதை செய்து கொன்ற இக்கொலை பாதகத்துக்கு, மதம் ஆதாரம் என்றால், மதங்களின் கொடுமைக்கு வேறு என்ன உதாரணம் வேண்டியிருக்கிறது என்று கேட்கின்றோம்.

ஜீவன்களை வதைக்கும் விஷயத்திலும் கொல்லும விஷயத்திலும் எல்லா மதங்களுக்கும் ஒரு தன்மையை உடையதாகக் காணப்படுகின்றனவே ஒழிய, ஒன்றுக்கொன்று வித்தியாசம் கண்டுபிடிப்பது என்பது கஷ்டமான காரியமாகவே தோன்றுகின்றது.

இந்த விஷயங்களில் அரசியல் ஆட்சிநிர்வாகமாவது சரியாய் நடந்து கொள்ளுகின்றது என்று கூட நம்மால் செல்ல முடியவில்லை. இப்படிச் சொல்வதால் அரசாங்கத்திற்கு கோபம் வந்தாலும் வரலாம. ஆனால் அப்படிப்பட்ட கோபத்தை, நாம்பொருட்படுத்த வேண்டுமானால் இப்படிப்பட்ட கொலைபாதகங்களை சகித்தாக வேண்டியதாய் இருப்பதால், சர்க்காரின் நிர்வாகத்தைஎடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

சாதாரணமாக அரசாங்கம் ஜீவகாருண்ய தத்துவத்தை ஒப்புக்கொள்ளுகின்றது என்றுதான் நாம கருதி இருக்கிறோம். உதாரணமாக ஒரு கோழியை தலை

கீழாக காலைப்பிடித்து தூக்கிக் கொண்டு போவதும், ஒரு பன்றியை தலைகீழாக கால்களை கட்டித் தூக்கிச் செல்வதும், ஒரு ஆட்டை கழுத்தில் கயிறுகட்டி தரதர வென்று இழுத்துச் செல்வதும், கழுத்துப் புண்ணுடன் ஒரு மாட்டை வண்டியில் கட்டுவதும், வண்டி ஓட்டும், சாட்டைக் குச்சியில் முள்ளைக் குத்திவைப்பதும், குறிப்பிட்ட பாரத்துக்கு மேல் ஒரு மனுவு இடை அதிகமிருப்பதும் ஆகிய காரியங்களை எல்லாம் குற்றமாகப் பாவிக்கப்பட்டு அவற்றிற்கு சட்டங்கள் மூலம் தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைமாத்திரமல்லாமல் ஒரு மனிதன் தன்னைத்தானே வதைசெய்து கொள்வதானசெடில் குத்திக்கொள்வது முதலியவைகளையும் குற்றமெனக் கருதி 144 மூலம் தடைசெய்யப்பட்டும்வந்திருக்கின்றன. இப்படி எல்லாம் இருக்கமேல் கண்டபடி யாகத்தின் பேரால் 23 ஆடுகளை விதரைப்பிடித்து நசுக்கிக்கொன்று இருப்பது இந்த சட்டத்தின் கீழ்வராது என்று ஒரு சர்க்கார் நினைத்திருக்குமானால் தங்களை ஜீவகாருண்ய சர்க்கார் என்று சொல்லிக் கொள்ள அவர்களுக்கு பூரண உரிமை உண்டா என்று கேட்க்கின்றோம்.

இதை மத உரிமை என்று சொல்லப்படுமானால், நரபலியும் நரமேத யாகமும் அதாவது மனிதர்களின் விதரைப்பிடித்துநசுக்கிக் கொன்று சுட்டுச் சாபபிடுவதும் குற்றமில்லை என்றுதானே கொள்ளவேண்டும்.

இம்மாதிரி கொலைபாதகங்களைப் பற்றி 1926 முதல் நாம்கூப்பாடு போட்டு வந்தும் அதை அரசாங்கம்சிறிதும் காதில்போட்டுக்கொள்ளாமல் இருந்து வருவதானது அரசாங்கத்தில் உள்ள பார்ப்பன ஆதிக்கத்துக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டாகும்.

இத்தப்படியான கொலைபாதகங்களை லக்ஷியம் செய்யாத ஆரியர்கள், மற்றவர்கள் மாமசம் சாப்பிடுவதாலும், கொலை செய்வதாலும் அவர்களை தாழ்ந்த ஜாதியார் என்று சொல்லவேண்டியிருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். ஜீவன்களுக்கு, சித்திரவதை இல்லாமல் ஒரே வெட்டில் க்ஷணநேரத்தில் அந்த ஜீவனுக்குக் கூட தெரிவதற்கில்லாமல் கொன்று சாப்பிடுகின்றவர்கள் தாழ்ந்த ஜாதியாரானால் ஜீவன்களைப் பிடித்து அதன் விதரை (பீஜத்தை) பதரப்பதர, துடிக்கத்துடிக்க மணிக்கணக்காய் நசுக்கிச் சித்திரவதை செய்து கொண்டு சாப்பிடுகின்றவர்களை எவ்வளவு கீழ்ஜாதி எவ்வளவு வன்னெஞ்ச ஜாதி என்று சொல்லுவது என்று கேட்கின்றோம். இப்படிப்பட்ட காரியங்களைச்செய்து கொண்டுஊராரும் உலகத்தாரும்சிரிக்கவும், இகழவும் நடந்துகொண்டு தாங்கள் உயர்ந்தவர்கள் என்றும், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் இவனைத் தொடக்கூடாது, அவனை கிட்ட அணுகவிடக்கூடாது, மற்றவனை கோவிலுக்குள், சத்திரத்திற்குள் நிழலுக்கு ஒண்டக்கூட விடக்கூடாதுஎன்பதுபோன்ற ஆணவமான கொடுமையானவார்த்தைகளால் இழிவுபடுத்தினால் எப்படி சகிக்க முடியும் என்றும் இப்படிப்பட்டவர்களை எப்படி சராசரி மனித சமூகத்திலாவது சேர்க்க முடியும் என்றும் கேட்கின்றோம்.

இந்த அக்கிரமங்களும் அநியாயங்களும் எப்படியோ போய்த் தொலையட்டும் என்று விட்டு விடலாம் என்றாலும், நாட்டு மக்கள் எல்லோருமே தங்களை இந்தப்படியான ஆரிய மதத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளும் அறியாமையையும் அநியாயத்தையும் எடுத்துக்காட்டுவதற்காக இவற்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

"ஜீவகாருண்யச்" சைவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள்.

இந்திய சட்டசபைத் தேர்தலும் R. K. S. ம்.

இப்போது அரசியல் உலகில் இந்திய சட்டசபைத் தேர்தல் பேச்சே எங்குபார்த்தாலும் பிரமாதமாகப்பேசிக்கொள்ளப் படுகின்றது. கூடிய சீக்கிரத்தில் இந்திய சட்டசபை கலைக்கப்பட்டு இவ்வருஷத்திலேயே புதிய தேர்தல் நடைபெறப் போகின்றது யாவரும் அறிந்ததே.

இந்திய சட்டசபை ஏற்பட்டு சமீப காலம் வரை அதாவது சுயமரியாதை இயக்கம் தோன்றும் வரை, நமதுமாகாணத்தில் அது (இந்திய சட்டசபை) பார்ப்பனர்களுக்கே ஏக போக மான்யமாயிருந்தது. இதன் காரணமாகவே தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாதார் என்கின்ற சமூகம் மனிதத்தன்மையுடன் இல்லையென்றும் அறிவிலும் ஆற்றலிலும் மிக பிற்பட்டவர்கள் என்றும் இந்தியா முழுவதும் விஷமப்பிரசாரம் செய்வதற்கு பார்ப்பனர்களுக்கு மிக அனுகூலமுமிருந்து வந்தது. அதற்கேற்றாற்போல் இந்திய பத்திரிகை உலகமும் எங்கு பார்த்தாலும் ஏதாவது ஒரு வகையில் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதால் பத்திரிகைகள் மூலமும் அவ்விஷமப் பிரசாரம் வெற்றிபெற அனுகூல மேற்பட்டது.

இப்போது தோழர்கள் சர். ஆர். கே. ஷண்முகம், எ. ராமசாமி முதலியார் முதலியவர்கள் இந்திய சட்டசபைக்குப் போக ஏற்பட்டதால் தென்னிந்திய பார்ப்பனரல்லாத மக்களின் தன்மை இன்னதென விளங்க இடமேற்பட்டதுடன் பார்ப்பன மக்களின், நம்மை நடத்தும் யோக்கியதையும் ஒருவாறு வெளியாக இடமேற்பட்டது.

இவர்களது (R. K. S. & A. R.) கொள்கை என்ன இவர்களால் மனித சமூகத்திற்கு ஏற்பட்ட நன்மை என்ன என்ற விவகாரத்தில் இப்போது நாம் பிரவேசிக்க வில்லை என்றாலும் தென்னிந்திய பார்ப்பனர் தேசபக்தர்கள்—தேசாபிமானிகள்—அரசியல் நிபுணர்கள் என்று சொல்லக்கூடிய எவர்களுடைய யோக்கியதைக்கும்நாணயத்திற்கும் திறமைக்கும்இவர்கள்இளைத்தவர்கள் அல்ல என்பதை கோபுரத்தின் மீது இருந்து கூறுவோம். இத்துடன் மற்றபடி இது வரை இந்திய சட்டசபைக்கு பார்ப்பனர்கள் நமது பிரதிநிதிகளாய் போய் உட்கார்ந்து சாதித்ததை விட இவர்கள் ஒன்றும் குறைவாய் சாதித்து விடவில்லை என்றும் பார்ப்பனர்களால் நமது மக்களுக்கு ஏற்பட்ட கெடுதியை விட இவர்களால் ஒன்றும் அதிகமாய் ஏற்பட்டு விடவில்லை என்றும் உறுதியாய் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டுவோம்.

ஆனால் சமீபகாலமாக இந்திய சட்டசபையில் சர். ஷண்முகம் அவர்களின் அறிவு, ராஜதந்திரம், பொருளாதார நிபுணத்துவம் ஆகிய காரியங்கள் இந்தியா முற்றும் உணர்ந்து உலகம் அறிய ஆரம்பித்ததும், தோழர் ராமசாமி முதலியாரின் பேச்சும் விவகார ஞானமும் இந்தியா முழுவதும் தெரிய ஆரம்பித்ததும் தமிழ் நாட்டு பார்ப்பனர்களுடைய வயிறு பெட்ரோலில் நெருப்பு பிடித்தது போல் எறியத் துடங்கி விட்டதால் எப்படியாவது வரப்போகும் தேர்தலில் இவர்களை தோற்கடிக்க செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் நமது பார்ப்பனர்களுக்கு இப்போது ஏற்பட்டு எங்கு பார்த்தாலும் அதே பேச்சாய் இருந்து வருகிறது. கோமணம் கட்டத்தெரியாத பார்ப்பனக் குழந்தை முதல் அய்யர்வாள், சாஸ்திரியார், ஆச்சாரியார் என்று சொல்லப்பட்ட பிரமுகர்கள் வரை "எப்படி ஷண்முகத்தை தோற்கடிப்பது? எப்படி அவருக்கு இந்திய சட்டசபைத்தலைமைப்பதவி இல்லாமல் செய்வது" என்பது தான் இப்பொழுது பெரிய கவலையாய் இருப்பதுடன் அதற்காக யாகம், ஜபம், தபம், மந்திரம் முதலியவை ஒவ்வொரு வீட்டிலும், திண்ணையிலும் பள்ளியரையிலும், கோர்ட்டுகளிலும், கிளப்புகளிலும் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன.

தோழர் ராமசாமி முதலியாரிடம் கூட பார்ப்பனர்களுக்கு அவ்வளவு அதிகமான ஆத்திரம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏனெனில் அவரை சமயத்தில் சரிப்படுத்திக் கொள்ளலாம் அல்லது பயப்படுத்தி விடலாம் என்கின்ற நம்பிக்கை அவர்களுக்குண்டு. ஏனெனில் அவரும் சில சமயங்களில், தீண்டாமை, கோயில் பிரவேசம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலிய பல விஷயங்களில் சமயம் போல் நடந்து கொண்டவரானதால் அவரைப் பற்றி கூட அவர்களுக்கு அதிக கவலை இல்லை. ஆனால், தோழர் ஷண்முகம் விஷயத்தில் அதுவும் அவர் இந்திய சட்டசபைத் தலைவர் ஆனபிறகு, அவரைப் பற்றி இமயமலைக்கும் கன்னியாகுமரிக்குமாக ஒரே தொடர்பாய் விஷமப் பிரசாரம் நடந்து வருகின்றது.

இப்போது பாட்னாவில் ஏற்படுத்தப் பட்ட சட்டசபை விவகார போர்ட்டின் முக்கியமான வேலையே எப்படியாவது சர். ஆர். கே. ஷண்முகத்தை தேர்தலில்தோற்கடிக்க வேண்டும் என்பதும் எப்படியாவது அவர் அதற்கு தலை

வராகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுமே யாகும். அதற்காகவே இப்பொழுது காங்கிரசும் காங்கிரஸ் பக்தர்களும் காங்கிரசுக்காக சிறை சென்று "தேச பக்தர்களான தியாயிகளும்" வேலை செய்ய போகிறார்கள் என்பதும் உறுதியான காரியம். சில பார்பனரல்லாதாரும் புத்தி இல்லாமலோ அல்லது பார்பனர்களுக்கு பயந்தோ, பொறாமையாலோ கூடவே கோவிந்தா போடுகிறார்கள்.

இப்படிப்பட்ட சமயத்தில் தோழர் சண்முகம் இன்னமும் தான் என்ன செய்யப்போகிறார், எந்த தொகுதிக்கு நிற்கப் போகின்றார் என்கின்ற விஷயத்தை "சிதம்பர இரகசியம்" போல் வைத்திருப்பது நல்லதல்ல, என்பதே நமதபிப்பிராயம்.

இரண்டு தொகுதிகள் அவருக்கு முழு ஆதரவையும் அளிக்கத்தயாராய் இருக்கின்றன என்றே கருதுகின்றோம். அதாவது ஒன்று கோவை, சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாத் தொகுதி, மற்றொன்று இந்திய வியாபாரிகள் சங்கத் தொகுதி இந்த இரண்டிலும் பூரண வெற்றியை இப்பொழுதே நிச்சயித்துவிடலாம். ஆனாலும்தோழர்ஷண்முகம் தனக்குள்ளபொருளாதார நிபுணத்துவம் வியாபார நிபுணத்துவம் ஆகிய இரண்டையும் உத்தேசித்து இந்திய வியாபாரிகள் பிரதிநிதியாக அங்கம் பெருவதே சிலாக்கியமானதென்று நாம் கருதுகின்றோம்.

ஏனென்றால் தோழர் ஷண்முகம் அவர்கள் விஷயத்திலும் ரிசர்வு பாங்கி வியாபார விஷயத்திலும் தனது அபிப்பிராயங்களைச் சொல்லவும் அத்துறைகளில் பாடுபடவும் தனக்குள்ள உரிமையை வலியுறுத்த பயன்படும் என்பதோடு தென் இந்திய வியாபாரிகளும் தோழர் ஷண்முகத்தைத் தங்கள் பிரதிநிதியாய் அடையும் கௌரவத்தை பெற இரண்டு கையையும் நீட்டி வரவேற்கக் காத்திருக்கிறார்கள்.

ஆதலால் இவ்வாரத்திலேயே அவரது அபேக்ஷகத்துவத்தையும் இன்ன தொகுதிக்கு என்பதையும் வெளிப்படுத்தி விட வேண்டுமாய் விரும்புகிறோம்.

இதே சமயத்தில் தோழர் ஷண்முகம் அவர்கள் நமது சுயமரியாதை இயக்க சமதர்மத் திட்டத்திற்கு ஆதரவு கூறி இருக்கிறார் என்பதையும் இவ்விஷயத்தில் அரசியல் விஷயத்தை விட சமூக இயல் அதாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தை முக்கியமாய் கருதி தோழர் ஷண்முகம் அவர்களை நாம் விரும்புகிறோம் என்பதையும், பார்ப்பனரல்லாத மக்கள் யாவரும் இதை உணர்ந்து அவருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மத நம்பிக்கையின் விளைவு.

வங்காளத்தில் ஒரு பெண் தனது கணவன்நோய்வாய்ப்பட்டு சாகுந் தருவாயிலிருப்பதைக்கண்டு கணவனுக்கு முன் தான் மங்கிலியஸ்திரீயாக இருந்து கணவனுடன் உடன் கட்டை ஏறவேண்டு, மென்று கருதி, மண்ணெண்ணெயை மேலே ஊற்றி நெருப்பு வைத்துக் கொண்டு இறந்து போனதாக அ. பி. செய்தி கூறுகின்றது.

இது எவ்வளவு பரிதாபகரமான விஷயம்? மத நம்பிக்கையினால் எவ்வளவு கொடுமைகளும், கேடுகளும் விளைகின்றன என்பதற்கு இதைவிட வேறு என்ன சாக்ஷியம் வேண்டும்.

"இந் நிகழ்ச்சிக்கு மத நம்பிக்கை காரணமல்ல-காதலே காரணம், கற்பே காரணம்" என்று சிலர் தத்துவார்த்தம் சொல்லி மதத்தைக் காப்பாற்ற இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களை ஒன்று கேட்கின்றோம்.

காதல் என்றும் கற்புஎன்றும் ஒன்று இருப்பதாகவே வைத்துக் கொண்டு பார்ப்போமானாலும் இன்று உலகில் புருஷனைசசாகக் கொடுத்து விட்டு விதவையாகவோ அல்லது வேறு ஒருவரை மணந்தோ, இரகசியமாகவோ, இயற்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பெண்கள் எல்லோரும் அவரவர்கள் புருஷனிடத்தில் காதலில்லாமல் கற்பு இல்லாமல் இருந்தவர்களா என்று கேட்கின்றோம். மற்றும் இன்று புருஷன் இறந்த உடனே இறக்கப்போகும் தருவாயிலோ மண்ணெண்ணெயை மேலே ஊற்றிநெருப்பு வைத்துக் கொண்டு சாவதற்கு தயாராயில்லாத பெண்கள் எல்லோரும் காதலும் கற்பும் அற்றவர்களா? என்றும் கேட்கின்றோம். ஆகவே மதத்தின் பெயரால் கல்வி அறிவற்ற ஆண்களும் பெண்களும் எவ்வளவு கொடுமைக்கு ஆளாகின்றார்கள் என்பதை அறிந்தும் மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது அறியாமையா, மூர்க்கத்தனமா அல்லதுதெரிந்தே செய்யும் அயோக்கியத்தனமா என்பது நமக்கு விளங்கவில்லை.

"சுயராஜ்யக்கக்ஷி செத்தது அது நீடூழி வாழ்க."

சுயராஜ்யக கக்ஷியாரின் யோக்யதை நாடறிந்ததென்றும் அதற்கு நல்லபேர் இல்லையென்றும் ஒரு வாரத்திற்குள்ளாகவே அதன் தலைவர்கள் என்போர்கள் தெரிந்து கொண்டு விட்டதால், அதை அது பிறந்த "தீட்டு" வீட்டிற்குள்ளாகவே கழுத்தைக் திருகி கொன்று விட்டு காங்கிரசே சட்டசபைகளுக்கு போட்டி போடவேண்டும்; ஆனால் சுயராஜ்பக்கக்ஷி பிரமுகர்களே சட்ட சபை போட்டி கமிட்டியில் இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். இது மக்களை ஏய்க்கச்செய்தசூழ்ச்சியேஒழிய, மற்றபடிசட்டசபையில் போய்ச் செய்யப்போகும் காரியத்தில் எவ்வித மாறுதலும் இல்லை என்பதோடு, சட்டசபைக்கு அபேக்ஷகர்களாக தெரிந்தெடுக்கப் போகும் நபர்களிலும் எவ்வித மாறுதல்களும் ஏற்படப் போவதில்லை.

மரணம்.

அநுதாபம்.

நமது இயக்க அபிமானியான கோட்டையூர்தோழர் ராம. அள. சிதம்பரம் அவர்களின் புதல்வன் திடீரென்று இறந்தசெய்தி கேட்டு திடுக்கிட்டோம். இச்செய்தி கேட்ட சில நாட்களுக்குள் அவரது துணைவியாரும் உயிர் துறந்தார் என்ற செய்தி கேட்க பெரிதும் வருந்துகிறோம். "உலகில்தோன்றி மறைவது இயற்கை" என்றாலும், இத்தகைய கஷ்ட நஷ்டத்தைக் கேட்க மனம் வருந்தாமலிருக்க முடியவில்லை. உலக இயற்கையை யுணர்ந்த தோழர் ராம அள. சிதம்பரம் அவர்கட்கு நாம் ஒன்றும் அதிகம் கூறத் தேவையில்லை. நமது அனுதாபம் மட்டும் அவருக்கு உரித்தாகுக!

யோகமே யோகம்.

சென்னை கவர்னர்.

சென்னை மாகாணத்துக்கு 39 வயதுள்ள வரும் ஒரு பிரபு வகுப்பைச் சேர்ந்த வருமான ஒரு வாலிபர் கவர்னராக வரப்போகின்றார். சென்னை மாகாண ராஜாக்களின்- ஜமீன்தார்களின் — பிரபுக்களின் லேவாதேவிக்காரர்களின் யோகமே யோகம்.

வாழ்க்கை ஒப்பந்தம்.

திருநெல்வேலி டவுன் காலஞ்சென்ற ஓ. சேரிவகாரர் குமாரர் தோழர் ஓ. எஸ். சுடலைமுத்து அவர்களுக்கும் பாலேயங்கோட்டை தளவாய் வி. பி. ஆறுமுகம் அவர்களின் புதல்வி ஏ. சரணத்தம்மாளுக்கும் நாளது 9-5-34 புதன் கிழமை மாலை 7மணிக்கு வாழ்க்கை ஒப்பந்தம் மருச்சுக் கட்டித்தெருவில் நடைபெறும். அதுசமயம் சமபந்தி போஜனமும்பாட்டுக்கச்சேரியும்நடைபெறும்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கும் அநுப்பை உண்டாக்கி விடலாம்.

இக்கட்டுரைகளின் அவசிய அவசர கோரிக்கையானது தொழிலாளர்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பார்களையும் ஒன்றுபடுத்தி அவர்களுக்கு ரோஷத்தைக் கிளப்பிவிட்டு சோஷயலிசத்திற்கு சரியாக கொண்டு செலுத்துதலேயாகும்.

கடவுள் விரோத பிரசாரத்தை சோஷயலிஸ்டு தத்துவங்களோடு புகுத்துவது சோஷியலிசத்தின் வளர்ச்சிக்குத் தீங்கு செய்வதாகும். பொதுவுடமை வாதிகள் முதல்தரமான நாஸ்திக வாதிகளே. ஆனால் உற்சாகமிகுந்த தொழிலாளர்களிடையே கடவுள் சம்மந்தமான பிரச்சினைகளை கிளப்பி மனிதசக்திகளை வீணாக்குவது பிரயோஜனமற்றதே. தொழிலாளர்களிடையே, ஆரம்பகாலத்தில் நாஸ்திகத்தைபரப்புவதற்கு லெனின் விரோதமாக இருந்தார். நாம் பொதுவுடமையை ஸ்தாபிப்பதற்கு முன்பு நாஸ்திகத்தை ஸ்தாபித்துவிடமுடியாது. நாம் ஏழைத் தொழிலாளர்களுடைய மூடநம்பிக்கைகள் பழைய எண்ணங்கள் இவைகளைப் போக்கவும், தூங்குமூஞ்சி பண்டிதர்களையும்—கனவுகாணும் புலவர்களையும் வேலை செய்யவும் நம்மோடு எதிர்க்கவும் செய்யவேண்டும். இது சம்பந்தமாக பின் எழுதுவோம்.

ரோஜா முத்தையா

பொன்மலை முதலாவது ஆண்டுவிழா.

12-5.34 மாலை 5-30 மணிக்கு சுயமரியாதைச் சங்க கட்டிடத்தில் அமைத்திருக்கும் "சமதர்ம விலாஸ்" லைப்ரரியையும், இலவச வாசகசாலையையும் ஷை சங்கத்தலைவர் எம். வி. துரைசாமி வேண்டுகோளுக்கிணங்கி, பாபநாசம், ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர் தோழர் சாமி சிதம்பரனார் அவர்கள் திறந்துவைத்து "கல்வியின்" அவசியத்தைப்பற்றி உபந்யாசம் செய்தார்.

பிறகு 6மணிக்கு சங்க கட்டிடத்தின் அருகில் உள்ள திடலில் ஆண்டு விழாவுக்காக அமைத்திருந்த பந்தலில், கொடிகளும், சுயமரியாதை வாக்கியம் அடங்கிய அட்டைகளாலும், பெரிய வரவேற்பு தட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அது சமயம் திருச்சி தோழர்களும், கிராமவாசிகளும், தொழிலாளர்களும் ஏராளமாக விஜயம் செய்துமிருந்தனர். மேற்படி ஆண்டுவிழாவுக்கு தோழர் சாமி சிதம்பரனார் தலைமை வகித்தார். தலைவருக்கு வரவேற்பு பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது. தலைவர் சங்கத்தின் முற்போக்கை பற்றியும், சுயமரியாதையின் இலக்ஷியத்தைப் பற்றியும் பேசியபின், மூவலூர் தோழியர் ராமாமிர்தத்தம்மாள் அவர்கள் இயக்கக் கொள்கைகளைப்பற்றி தெளிவாக சுமார் ஒருமணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தோழர் பொன்னம்பலனார் அவர்கள், பம்பாய் தொழிலாளர் கஷ்ட நிலைமையைப் பற்றியும், தொழிலாளரிடையில், கடவுள், ஜாதி, மதம், தேவையில்லையென்றும் வெகு உற்சகத்தோடு பேசினார். பின்னர் அறிக்கையையும், நாளது நடந்த வரவு செலவு கணக்குகளும் வாசிக்க பெற்றது.

துறையூர்

துறையூர் சுயமரியாதைச் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 20-5-34 தேதி சைமன் ஹாலில் கூடி கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(1) சங்க மெம்பர் தோழர் கே. வி. பெருமாள் ரெட்டியார் அவர்களை காலியான துறையூர் சர்க்கிள் திருச்சி ஜில்லா போர்டு உபதேர்தலுக்கு நமது சமதர்ம கட்சியின் சார்பாக நிருத்துவதென்றும், 25-5-34ல் நடைபெறப்போகும் திருச்சி முனிசிபல் கவுன்சில் சேர்மன் தேர்தலில், மீண்டும் தோழர் பி. ரத்னவேலு தேவர் அவர்களையே சேர்மனாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கவுன்சிலர்களை இச்சங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது, என்ற தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது என காரியதரிசி எழுதுகிறார்.

20-5-34ல் கூடிய திருச்செங்கோடு தாலுகா

ஆதிதிராவிட மகாநாடு.

தோழர் ஆர். அன்னபூரணி அவர்களின் ஆரம்பவிழாப் பிரசங்கச் சுருக்கம்.

அன்பார்ந்த தோழர்களே! தாழ்த்தப்பட்ட தனிப்பெருங்குடி மக்களின் முன்னேற்றங்கருதிக் கூட்டப்பட்டுள்ள இம்மகாநாட்டினை ஆரம்பித்து வைக்கும்பணியை இதன் நிர்வாகிகள் எனக்களித்தமைபற்றி எனது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்

தோழர்களே நமது பண்டைப் பெருமை எவ்வாறிருப்பினும் ஏழரை கோடி மக்களாகிய நாம் இன்று மனித உரிமையற்று—உயிர் வாழ்வதற்கின்றியமையாத ஜீவாதார இயற்கை உரிமைகளும் பறிக்கப்பட்டு, கேவலம், மிருகங்களிலும்கேடாய் வாழ்கிறோம் என்பதுதான் உண்மை!

நமது நிலைமை.

ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரை அடக்கி ஆளுவதென்னும் அக்கிரமம் அழிந்துபட வேண்டும். இத்தனை பேரும் செய்துவரும் கொடுமைகளால் நம்முடைய மக்கள் கல்வியறிவற்றவர்களானார்கள். அஃதில்லாமையால் மெய்யறிவும் அற்றவரானார்கள். பொருளாதாரத் துறையில் பாதாளத்தில் அழுத்தப்பட்டார்கள். குடிக்கவும் குளிக்கவும் தண்ணீர் வசதியற்றவரானார்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் படுக்கப்பாயும், ஒண்டியிருக்க குடிசையுமற்றவர்களானார்கள் சுகாதாரமென்பது இன்னதென்றே அறியாதவரானார்கள் இரவு பகல் ஓய்வின்றி மேல் ஜாதியினருக்கும் ஆண்டை மாருக்கும் உழைத்து உழைத்துப் போட்டு விட்டு, ஒருகை கூழிற்கும் அவ்வாண்டை மாரின் தயவை நோக்கி தெருவில் நின்று "சாமி ஆண்டே" என்று கதறவேண்டியவர்களாயினார்கள்! இக்கொடுமை இன்றல்ல நேற்றல்ல நம்மவர்கட்கேற்பட்டது.

இக்காலத்திலுங்கூட ஒவ்வொரு சமூகமும் தத்தம் உரிமைகளுக்காக போராட வந்திருக்கும் இக்காலத்திலுங்கூட பகுத்தறிவு சூரியன் பிரகாசித்துக்கொண்டிக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டிலுங்கூட—விடுதலை சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் என எண்டிசையும் முழங்கிக்கொண்டிருக்கும்இக்காலத்தில் ஆண்மையும், ரோஷமும் கொண்டு, தங்களைப்பிணித்திருக்கும் அடிமைத்தளையையும் உடைத்துச் சிதைக்க நாதஞ் செய்வதெப்போது?

காந்தியும், தீண்டாமையும்.

இனிநமது விடுதலை மார்க்கங்களைப்பற்றி சிறிது கூற விரும்புகிறேன். தீண்டாமை ஒழிய வேண்டுமென எங்கணும் பெரும் முழக்கம் முழங்கி வருகிறது. தீண்டாமை ஒழிப்பிற்கான மார்க்கங்களும் பலவாகக்கூறப்படுகின்றன. சீர்திருத்த வாதிகள் தீண்டாமை ஒழிப்பிற்காக முயற்சி எடுத்து வருகிறார்கள். பலவாண்டுகளாக "தீண்டாமை யொழிக" வெனவாயளவில்சொல்லியும், எழுத்தளவில் தீர்மானங்கள் எழுதியும் வந்த காங்கிரசும் காந்தியும் தங்கள் விருப்பத்துக்கு மாறாக வேணும் அப்பிரச்சினையிலிறங்க வேண்டியதாய் விட்டது. தீண்டாமைஒழிப்புவிஷயத்தில் தோழர் காந்தியாருக்கு வந்த சிரத்தையானது. இப்பழங்குடி மக்கள்; சமூகவாழ்விலும் அரசியல் வாழ்விலும் மிகபிற்போக்கடைகிறார்களே இது மனித தர்மமல்லவேயென்றபச்சாபத்தாலும் நேர்மையான எண்ணத்தாலுமேயென்று சொல்லிவிடமுடியாது. வருங்கால அரசியல் சம்பந்தமான தொகுதியில் பிரச்சினையில தாழ்த்தப்பட்ட மக்கள் தனித்தொகுதியில் இந்து சமூகத்தை விட்டு பிரிந்துவிடுவார்களானால், அது இந்துமதத்தின் பலத்திற்கு பங்கமாய் விடுமே என்று எண்ணவும், அத்துடன் இந்த ஏழரைக் கோடிதாழ்த்தப்பட்டமக்களும், இதரதனித்தொகுதியாளரான,முஸ்லீம்களுடனோ அன்றி கிருஸ்தவர்களுடனோ சேர்ந்து விடுவார்களாயின் இந்து மதத்தின்பாடு பின்னும் மோசமாய் விடுமே என்ற எண்ணமுந்தான் காந்தியாரை திடீரென்று தீண்டாமைப்பேச்சை எடுக்குமாறு செய்ததென்பது மறுக்கமுடியாத உண்மையாம். எனவே காந்தியாரின் கருத்தெல்லாம் எந்த விதத்திலும் இந்துமதம் காப்பாற்றப்படவேண்டுமென்பதில் இருந்ததே தவிர, உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்களின்பால் அனுதாபங்கொண்டதில்லை என்பது உண்மை.

போதாக்குறைக்கு "ஹரிஜன்" என்று ஓர்புதுப்பெயரும் கண்டுபிடித்தார். ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று அறிக்கைகளும் வெளியிட்டார். மனிதன் உண்ண உணவிற்கு வழியில்லாமலும் உடுக்க கந்தையில்லாமலும் குடியிருக்க இடமில்லாமலும் போதுமான கல்வி யில்லாமலும் அவதிப்படுகின்ற காலத்தில்—சட்டமூலம் அவர்களுக்கு தக்க பாதுகாப்பும் போதுமான கல்வியும், பொருளாதாரம் உயரத்தக்க மார்க்கமும் கண்டு நடைமுறையில்கொண்டுவருவதும், அரசாங்கத்தில்பொறுப்புவாய்ந்த உத்தியோகங்கள் வகிப்பதாலும்மட்டிலுமே உண்மையில் தீண்டாமை ஒழியுமேயன்றி, கவைக்குதவாதகல்லுச்சாமிகள் நிறைந்து சாக்கடை நாற்றம் வீசுகின்ற கோயிலுக்குள் போய் கையிலுள்ளகாசையும் கரியாக்குவதால் தீண்டாமை ஒழிந்து விடுமென்று கூறுவதும் "ஹரிஜன்" 'சிவஜன்' என்று கூப்பிடுவதும், தரித்திரநாராயணன் என்றுதந்திரம் பேசுவதும், யாரை ஏமாற்றுவதற்கென்று கேட்கிறேன்.

கடவுள் வழிபாடு

இனிதாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் அந்த கோவில்களுக்குள் போய் அங்குள்ள குழவிகல்லுகளைக்கட்டி மாரடிப்பதால் இவர்களது நிலைமை இம்மியளவேனும் உயர்ந்து விட மார்க்கமுண்டா என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். எனவே 'அரிஜன்' என்பதும் 'ராமநாம ஜெபம்' செய்யுங்களென்பதும் ஆலய பிரவேசமென்பதும், மக்களை மேலும் அடிமைப்படு குழியிலாழ்த்துவதை த்தவிர, உண்மையில் இவர்களை இம்மியளவும் உயர்த்தவல்லவென்பதை உரிமை பறிக்கப்பட்ட, பரிதாபத்திற்குரிய தாழ்த்தப்பட்ட மக்கள் உணர வேண்டுகிறேன்.

நமக்குள்.

மனிதனுள் மனிதனது சக்திக்கு எல்லையே கிடையாது. மனிதன் தன்னிடமுள்ள சக்திகளைத் திரட்டி ஒருமுகப்படுத்திக்காரியஞ்செய்வானாயின் அவனது செயல்களில்தோல்வியேகாணமுடியாது ஆனால் மனிதன் தன்சக்தியை சிதற விட்டிருப்பதால் இன்று பலமிழந்து நிற்கிறான். நம்மிடமுள்ள சக்திகளை நாம் ஒருமுகப்படுத்திக் கொள்ள வில்லையானால் பின்னர் எதிரிகளை எதிர்த்து எவ்வாறு வெற்றி கொள்ளப் போகிறோம் நாம் நமது பூரண மனித சுதந்திரத்தை எவ்வாறு அடையப் போகிறோம். எனவே தோழர்களே! இனியேனும் பள்ளர், பறையர், சக்கிலியர், குறவர் என்ற எல்லோரும் மேல்ஜாதிக்காரர் என் பேரால் வஞ்சிக்கப்பட்டுமிடிமைக்குள்ளாயிருக்கிறோமென்பதை யுணர்ந்து ஒன்றுபட்டு எதிரிகளுடன் போர் தொடுக்கத்தயாராக வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இம்மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நடைபெறும் முறையில் வருமாறு தலைவர் வீரையன் அவர்களும், ஏனைய வாலிபத் தோழர்களும் முயற்சி எடுத்துக் கொள்ள வேணுமாய்க் கேட்டுக் கொண்டு— இம்மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறேன்.

மனித வாழ்க்கையும், புதுமையும்.

தோழர் அ. பொன்னம்பலம் பிரசங்கம்.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் திருப்பூர் செங்குந்தர் மகாநாட்டில் "மனிதவாழ்கையும், புதுமையும்" என்பது பற்றிப் பேசியதாவது:—

சகோதரர்களே, சகோதரிமார்களே!

மனிதவாழ்க்கை மிகவும் மேலானதுஎன்பதாய்ச்சொல்லுகின்றோமே யொழிய அதைநாம் கைஆளுதல் மிகவும் குறைவு. மனித சமுதாயத்தில் வரக்கூடிய ஒவ்வொரு புதுமையையும் ஆவலுடன் வரவேற்கின்றோம். சமதர்மத்தைப் பொது ஜனங்களிடத்தே பரப்பி நல்லமழிச்க மக்களை திருப்பமுயல்கின்றோம். பழயன விலக்கி- புதுமைகளை கைக்கொள்ளும் விஷயத்தில் நாம் ஆத்திரம் கொள்ளக்கூடாது.நேர்மையை கைக்கொள்ள வேண்டும்.அறிவுப்புதுமையாகநல்லவழியில் சென்றுகொண்டிருக்கிறது. சமூக முன்னேற்றம் அவசியம்வேண்டும். இன்றுகாலையில் கூட வாலிபர்கள் விஷயாலோசனை நடக்கும் சமயம் ஆத்திரப்பட்டு வெளியேரவும் முயன்றதைக்காண என்மனம் மிகவும் புண்படுகிறது.அபிப்பிராய பேதங்கள் யேற்படுவது சகஜம்.அதற்காக நாம் நமது மனதை சோறவிடக்கூடாது. காரியத்தில் கண்ணிருக்கவேண்டும். நமது நாட்டில் கல்வி விஷயம் ரொம்பவும் குறைவு பெண்களிலே 100க்கு 7 பேர்களும், ஆண்களிலே 100 க்கு 20 பேர்களுமே படித்திருப்பதாகக் காணகிடக்கிறது. இது நமக்கு ஓர் பெரிய குறைவு என்பதை நாம் எண்ணுவதேகிடையாது. கல்வி விஷயத்திலே உங்கள் சமுகத்தார் இன்னும் வேண்டிய கவனம் செலுத்த வேண்டும்.இதைநான் முன்னமே சென்ற காங்கயம் மகாநாட்டிலும்கூட வர்புரித்தியிருக்கிறேன். பொது விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் சொற்பமும் கூடாது. வாலிப சங்கத்தார் முக்கியமாய் தலைமை சங்கத்தை அனுசரித்து நடக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். எதிலும் பிணக்குகள் வைத்துக் கொள்ளக்கூடாது. கல்வி விஷயத்தில் பூராவும் நாம் ராஜாங்கத்தையே நம்பி இருந்து விடக்கூடாது. நமது தென்நாட்டில் நாடார் குலாபிமானிகள் கல்வி விஷயத்தில் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு நடத்தி வருகிறார்கள் என்பதை நீங்களே பாருங்கள். நாளடைவில் பல பள்ளிக் கூடங்களையும் ஏற்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள். அதுபோலவே உங்கள் வாலிபர்களும், பெண்களும், வயோதிகர்களும், வயது சென்ற பெண்களும் கூட கல்வி பயிலுவதில் முன்வரவேண்டும். படிப்பில்லாத படியால் தான் புதுமையாகத் தோன்றும் ஒவ்வொரு விஷயமும் படிப்பு இராதவர்களுக்கு ஒரு புதுமையாகத் தோன்றுகிறது. ஒற்றுமை தான் பிரதானம் வயது சென்று விட்டதே நமக்கு படிப்பு வருமோ வராதோ என்கின்ற சந்தேகமே நமக்குக் கூடாது. படிப்பு எல்லா வகுப்பினருக்கும் பொதுவானது. யாரும் கற்கலாம். சில பெண்களுக்கு சரஸ்வதி என்று பெயரிடுகிறார்கள். ஆனல் அப்பெண்ணுக்கு அ. ஆ. கூட தெரிவதில்லை. இதுஒரு பெரும் குறைவல்லவா? உத்தியோகத்துக்காக நாம் படிக்க வேண்டும் என்பதை எண்ணக்கூடாது அறிவுவிரிவடைந்துமேல்நாட்டாரைப் போல் நாமும் நமதுபெண்களும் கல்வி விஷயத்தில் முன்னேறல்வேண்டும்.காலம் கழிந்து வருகிறது. நாம் நமது நாளை வீணுக்காமல் கல்வியில் நமது காலத்தை கழிக்க முயல்தல் வேண்டும். சமூக முன்னேற்றத்துக்கு படிப்பே காரணம். உங்கள் சமூகத்தார் நமது கோவை ஜில்லாவில் விடாது. 21-ஆண்டுகளாக சமூக சீர்திருத்த மகாநாடுகள் போட்டு பெரிய தலைவர்களைக் கொண்டு செவ்வனே நடத்திவருகிறீர்கள். அதுபோல் உங்கள் சமூகத்தார் அதிகம் நிறைந்துள்ள மாயவரம், குப்பகோணம், நாகை முதலிய ஊர்களில் சிரத்தை காட்டியிருந்தால் மிகவும் மேன்பாடாயிருந்திருக்கும், இனியேனும் உங்கள் மரபினர்கள் பலரும் வெளியூர்களில் அக்கரை காட்டுவார்கள் என்று நம்புகிறேன். நீங்கள் உங்கள் ஜில்லாவில் மட்டில் வேலை செய்தால் போதாது, வெளி ஜில்லாக்களிலும் உங்கள் மரபினர்கள் அதிகம் உள்ள ஊர்களுக்கும் சென்று நீங்கள் கோறியுள்ள சமுதாய சீர்திருத்த விஷயத்தைப் பிரசாரத்தின் மூலம் விருத்தி செய்ய வேண்டும் என்று நான் யோசனை கூறுகிறேன். நீங்கள் உங்கள் பெண்களை கோவில்களில் நடக்கும் திருவிழாக்களுக்கு அனுப்புகிறீர்கள். டிராமா, பயாஸ்கோப்களுக்குஅனுப்புகிறீர்கள் அங்கே அவர்கள் கூட்டத்தில் இம்சைப்பட்டு பலபொதுஜனங்களால் தீண்டப்படுகிறார்கள்- அது உங்களுக்குக் கேவலமாய் தோன்றவில்லை ஆனல் பொதுக்கூட்டங்கள் சமூக கூட்டங்கக்குஅனுப்புவதில்லை. பெண்கள் இராமல் நீங்கள் பேசியும், தீர்மானங்கள் செய்தும் வருவதால் யாதொருபயனும்இல்லை- விஷயங்கள் முற்றிலும் அவர்களைச் சேர்ந்தது ஆகையால் இனியேனும் மஹாசபை மீட்டிங்கு முதலியவைகளுக்கு உங்கள் பெண்களையும் அழைத்துக்கொண்டுவரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

றவின் பாகுபாடு எப்படி இருக்க வேண்டும் என உணரவும், உணர்ந்ததற்குத்தக்கவாறு கூட்டுறவைக் கூட்டவோ, குறைக்கவோ, விலக்கவோ எது உச்ச நன்மையைத்தருமோ அதைக்கையாண்டு சமாளிக்கவும் இடமாகும்.

5. இந்த விதமாகக் கூட்டுறவு முறையில் ஆலை நடத்தப்படுகையில் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டவோ, வேலை நேரத்தைக் குறைக்கவோ, மற்ற வசதிகள் செய்யவோ, ஆலையின் நிலைமை இடந்தருமா, தராதா என்பதைத் தொழிலாளர்கள் வேறு யாருடைய உதவியுமின்றித் தாங்களாகவே நேரில் தெரிந்து கொள்ள முடியும். இடந்தருமென ப்பட்டால் அந்த நன்மைகளை வேறு எவ்விதத் தடையுமின்றிச் செய்ய முனைந்து முன் வரலாம். வேலை நிறுத்தமும் அதற்கு இடமும் வேண்டியதில்லை. தொழிலாளர்களுக்காக உழைப்பதாகச் சொல்லி தங்கள் காரியத்தை நிறைவேற்ற விரும்பும் போலி நண்பர்கள் கையில் சிக்க வேண்டாம். தொழிலாளர்கள் கண் கால் தெரியாமலும், முதலாளிமார்களுக்கு இருக்கிற சங்கடங்கள் தெரியாமலும், பொறுப்பற்றுப் பேசுகிறார்கள் என்று சொல்லித் தொழிலாளர்களுடைய வேண்டுகோளை எளிதில் தள்ளிவிட இடமிராது. தொழிலாளர்கள் விரும்பும் வசதிகளைச் செய்ய ஆலையின் அக்கால நிலைமை இடந்தராது எனத் தொழிலாள முதலாளிமார்களுக்கும் பட்டால் அப்படி இடந் தரும்படி செய்ய என்ன வழியுள்ளது, என்ன மாறுதல் வேண்டும் என்பனபோன்ற ஆராய்ச்சிகளை இரு முதலாளிமார்களும் சேர்ந்து செய்யலாம்.

6. இந்தக் கூட்டுறவு முறையில் ஆலையை நடத்துவது தனி முதலாளிமார்களுக்கும் இதுவரை இல்லாத நன்மையைப் பயப்பதாகும். வேலை நிறுத்தம் என்பது அறவே அகன்று விட அடி கோலியதாகும். தொழிலாளர்கள் விரும்பும் வசதிகளைச் செய்ய ஆலையின் நிலைமை இடந்தராது என்பதைப் பிறர் சொல்லாமல் தொழிலாளர்கள் தாங்களே தெரிந்து கொள்ளவும் இடமாகும். தொழிலாளர் ஆலையின் உள்விவரம் தெரிந்து கொள்ளக் கூடாமலும், தெரிந்து கொண்டாலும் உணரக் கூடாமலும் இருக்கிற இந்தக் காலத்தில் அவர்களுடைய வேண்டுகோள்கள் இருக்கிற மாதிரி இல்லாமல் பொறுப்புள்ளதும் ஆலையின் நிலைமைக்குத்தகுந்தவாறும் இருக்கும். அவர்கள் வேண்டுகோள் ஒத்துக்கொள்ளக்கூடியதாகஇல்லாமலிருந்தால் அனுகூலங்களோடு எடுத்துக்காட்டி வேண்டுகோளை மட்டுப் படுத்துவது எளிதானவேலையாகும். போலிநண்பர்களிடம் தொழிலாளர்கள்அகப்பட்டு அவர்கள் தங்களுக்கும் ஆலைக்கும் கேடு செய்வதைத்தடுப்பதும் எளிதாகும்.

7 இவற்றிற்கெல்லாம் மேலாக முதலாளி மார்களும் தொழிலாளர்களும் ஒருவரோடொருவர்உள்ளன்போடு தோழமை பூண்டு தங்கள் தொழிலுக்கு வேண்டிய உணவுபொருள்கள் உற்பத்தி செய்பவரோடும் ஒருமனப்பட்டு, வெளிநாட்டுப்போட்டியையும் வெல்லமுழுக்கருத்தையும் செலுத்தலாம். தமிழ்நாட்டைப்பொருத்தமட்டில் வெளி நாட்டுப்போட்டி என்பது ஜப்பான், ஆங்கிலப்போட்டிகள் மாத்திரமல்ல, பம்பாய் முதலிய வெளிநாட்டுப்போட்டியையும் சேர்ந்ததாகும். சென்னையில் இருக்கிற ஒரு நூல் ஆலை பம்பாய் முதலாளிமார்களுடையது.. கோயில்பட்டியில் தமிழ் நாட்டு முதலாளிமார்களுடையதாய் இருந்த நூல் ஆலை வெளியாருடையதாகி விட்டது. அவர்கள் தமிழ் நாட்டில் வேறு இடங்களிலும் புது ஆலைகள் துவக்கப் போவதாகப் பேச்சு. வட நாட்டாருடையபோட்டி நூல் ஆலையில் மாத்திரமல்ல, வியாபாரத்திலும், வட்டிக்கடைகளிலும், மற்றதுறைகளிலும், சிறுகச்சிறுகத் தமிழர்களை அப்புறப்படுத்திக்கொண்டு வருகிறது. ஆகையால் தமிழர்கள் போதிய ஊக்கமும், அக்கரையும் காட்டாவிட்டால் தங்கள் நாட்டிலேயே, சமயத்திலிருப்பது போலத் தொழிலிலும் பொருளிலும் அடிமையாவார்கள். இதை நீக்க விரும்புகிறவர்கள் முதலில் முதலாளி மார்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உண்மையான நிலைத்த ஒற்றுமையை உண்டு பண்ண ஏற்பாடு செய்யவேண்டும். வேலை நிறுத்தம் இல்லாத தமிழ் நாட்டு ஆலைகளில் நான் மேலே சொன்ன ஒற்றுமை ஏற்பாட்டை உண்டுபண்ணுவது எளிதாயிருக்கும். அந்த வழியில் எல்லோரும் முயலுவோமாக. இப்பொழுது வேலைநடக்கும்பழைய ஆலைகளில் இவ்வேற்பாட்டைசெய்வதற்குச்சற்று தவக்கமிருந்தாலும், சர். ஆர். கே. ஷண்முகம் அவர்கள் போத்தனூரில் அடிப்படைக்கல் நாட்டப்போகும் ஆலையில் முதலிலிருந்தே இந்தஏற்பாட்டை செய்வது இன்னும் எளிதாயிருக்கும் பொறுப்புள்ளோர் இவ்வழியில் முயலுவார்களாக.

ரஷ்யமணி.

தஞ்சை ஜில்லா வல்லம் சுயமரியாதை தோழர்களான இராஜாம்பாள் வாசுதேவன் அவர்களின் குழந்தைக்கு ரஷ்யமணி எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் விவாகரத்தும் விவாகமும்.

ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த விவாகரத்து நீதி மன்றங்களில் சுமார் 15 வருடங்களாகப் பிரதம நீதிபதியாக உத்தியோகம் வகித்து 20,000 விவாகரத்து வழக்குகளில் தீர்ப்புக்கூறி அனுபவம் பெற்றுள்ள திரு. ஜியார்ஜ் ஏ. பார்ட்லட் விவாகரத்து விஷயமாகப் பின் வருமாறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்:-

"திருமணங்களின் பெரும்பாலனவற்றின் விளைவு ஏமாற்றத்தையே கொடுக்கின்றன. இதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். பெண்களும் ஆண்களும் பரஸ்பர அன்பு மிகுதியால் மணம் செய்து கொள்கின்றனர். இதே போல் மணம்செய்து கொண்ட பின்னர் அவர்களுக்கிடையே வெறுப்புஏற்பட்டால், தாராளமாக அவர்கள் விவாகரத்துச் செய்து கொள்ளலாம். உண்மையான காதல் ஓர் இளைஞனுக்கும் ஓர் யுவதிக்கும் இடையே ஏற்படுமாகில், அவர்களுடைய திருமணம் மகாப் புனிதமானதாகும். இதே போன்று அவர்களுக்கிடையே மனஸ்தாபம் ஏற்படுமாகில் விவாகம் ஆரம்பத்தில் எவ்வளவு புனிதமாகக் கருதப்பட்டதோ அவ்வளவு புனிதமாக விவாகரத்து கருதப்படும்."

திருமணங்களின் ஏமாற்றம்.

அநேகர் விவாகரத்துச் செய்து கொள்ளாமலிருப்பதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. மதக்கட்டுப்பாடுகளும், சமூக நியதிகளும் விவாகரத்துச் செய்து கொள்வதினின்று அவர்களைப் பலமாகத் தடை செய்கின்றன. பொது ஜனங்கள் தங்களுடைய நடத்தையைச் சந்தேகிக்காமலிருக்கும் பொருட்டும் சில தம்பதிகள் விவாகரத்துச் செய்து கொள்கிறார்களில்லை. அறிஞர் பார்லட் போன்றவர்கள் தற்காலத் திருமணத்தின் விளைவு முழு ஏமாற்றமாக இருக்கிறதென்று பலமாக அபிப்பிராயப்படுகின்றனர். விரைவில் ஆண்களும், பெண்களும் தற்பொழுது திருமணங்கள் நடைபெறும் முறையை அறவே மாற்றிக் கொள்வரென்பது நிச்சயம். திருமண முறையில் விசேஷ மாறுதல்கள் புகுத்தப்பட வேண்டுமென்று நீதிபதி பார்லட் அபிப்பிராயப் படுகின்றார். 1000 திருமணங்களில் 100 திருமணங்கள் கூட திருப்தி கொடுக்க வில்லையென்பதை நீதிபதி பார்லட் அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டிருக்கிறார். திருமணங்களிற் பெரும்பாலன ஏமாற்றத்தைக் கொடுப்பதற்குக் காரணமென்ன வென்பதை ஆராய்ந்தறிந்திருக்கிறார். அவர் விவாகரத்துகளின் காரணத்தைப் பின் வருமாறு விளக்குகிறார்:-

"விவாகரத்துச்செய்து கொள்ள விரும்பும் தம்பதிகள் உண்மையான காரணத்தைக் கூறுகின்றார்களில்லை. நிந்தனை, கொடுமை, அவமரியாதை அலக்ஷியம் முதலிய பற்பல பதங்களைப் பிரயோகித்து அவர்கள் விவாகரத்திற்குக் காரணங்கள் காட்டிவிடுகின்றனர். இது நான் அனுபவத்தில் கண்ட விஷயம். என்னிடம் இவ்வாறு பல விவாகரத்து வழக்குகள் என் முன்பு விசாரணைக்கு வந்திருக்கின்றன. ஒரு பெண் தன்னைத் தன்னுடைய கணவன் சிகரெட்சாப்பிடுமாறு வற்புறுத்தியதாகவும், அதனால் விவாகரத்துச் செய்து கொள்ள அனுமதி வேண்டுமென்றும் என்னை வேண்டினாள். அவளுடைய வேண்டுகோளை நான் நிறைவேற்றி விட்டேன். மற்றோர் பெண் தன்னுடைய கணவனை ஓயாமல் பேசிக் கொண்டிருப்பதால் தனக்கு மிகவும்தொந்தரவு ஏற்படுகிறதென்றும், ஆதலின் விவாகரத்துச் செய்து கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் என்னிடம் கூறினாள். அவளுடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்தேன். உண்மையைக்கூறுமிடத்து கணவர்கள் தங்களுடைய மனைவிகளைக் கொடுமையாக நடத்துவதால் விவாகரத்து வழக்குகள் ஏற்படுவதில்லை. மணம் செய்து கொண்ட பின்னரே பெண்களில் அநேகர் தாங்கள் எதிர்பார்த்தது போல் தங்களுடைய கணவர்களிடமிருந்து சுகத்தைப் பெறுகிறார்களில்லை. ஆகவே அவர்கள் விருப்பப்பிரகாரம் தங்களுக்குச் சுகத்தைக் கொடுக்கும் ஆடவர்களை மணந்து கொள்ள விரும்புகின்றனர். "எங்களுடைய கணவர்கள் எங்களுக்கு நாங்கள் எதிர் பார்த்தது போல் சுகத்தைக் கொடுக்கவில்லை. ஆதலால் நாங்கள் அவர்களுடன் விவாகரத்துச் செய்து கொள்ள விரும்புகிறோம்." என்று பெண்கள் நீதிபதிகள் முன்பு கூறமாட்டார்களென்பது நிச்சயம். ஆகவே விவாகரத்துச் செய்து கொள்ளும் பெண்களும், ஆண்களும் விவாகரத்தின் உண்மையான காரணத்தை வெளிப்படையாகச் சொல்கின்றார்களில்லை. அந்தரங்கச் சம்பாஷணைகள் மூலம் சில தம்பதிகளிட மிருந்துநான் விவாகரத்தின் உண்மைக்காரணத்தை அறிந்து கொண்டேன்.'

திருமண விஷயத்தில் அரசாங்கம்.

ஐக்கிய அமெரிக்க நாட்டைச்சேர்ந்த நீதிபதி பார்லெட் தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்திலிருந்து மேனாடுகளில் விவாகரத்துக்கள் சர்வசாதாரணமாகிவிட்டன வென்பது நன்கு புலப்படுகின்றது. மேனாடுகளிற் சிலவற்றின் அரசாங்கம் திருமணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய புதிய மார்க்கங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். திருமணம் செய்து கொள்ளாதவர்களுக்கு வரி விதிப்பதென்பது ஓர் பழய வழக்கமாகும். இத்தாலிய சர்க்கார் தங்களுடைய நாட்டிலுள்ள பிர்மச்சாரிகளுக்குத் தனிப்படவரி விதித்துவருகின்றனர். ஜனத்தொகையை அதிகப்படுத்தும் நோக்கத்துடனேயே அவர்கள் மணம் செய்து கொள்ளாதவர்களுக்கு வரி விதித்து வருகின்றனர். புதுமணத் தம்பதிகளுக்கு இத்தாலியின் சர்வாதிகாரியாகிய சிஞ்ஞோர் முஸோலினி தமது சொந்தச் செலவில் பரிசுகள் வழங்குகின்றார். மற்றும் அவர் குடும்பஸ்தர்களுக்கு அநேக வசதிகள் செய்திகொடுத்திருக்கிறார். மகா யுத்தத்திற்குப் பின்னர் பிரெஞ்சு சர்க்கார் பெரிய குடும்பங்களுக்குப் பணஉதவி செய்தனர். குழந்தைகள் ரயில் வண்டிகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கு அவர்கள் ஏற்பாடுகள் செய்தனர். மணம் செய்துகொள்ளும் குமாஸ்தாக்களின் சம்பளத்தை அவர்கள் அதிகப்படுத்தினர். சுதந்தர அயர்லாந்திலும் மணம் செய்து கொள்ளும் இளைஞர்களுக்கு சர்க்கார் பண உதவிசெய்கின்றனர். மணம் செய்து கொண்ட சர்க்கார் ஊழியர்கள் சுதந்தர அயர்லாந்தில் 100 பவுன் முதல் 200 பவுன்வரை சம்பள உயர்வு பெறுகின்றனர். ஜெர்மனியில் ஹிட்லர் சர்க்கார் மணம் செய்துகொள்ளப்போகும் தம்பதிகளுக்கு சுமார் 60 பவுன் வரை கடன் கொடுத்துதவுகின்றனர். சுமார் 9 வருடங்களில் தம்பதிகள் சர்க்காருக்குக் கடனை சிறிய தொகைகளாகக் கொடுக்கலாம். அயர்லாந்தில் 6 வருடங்களுக்குக் குறையாமல் ஊழியம் செய்த பின்னர் மணம் செய்து கொள்ளும் பெண் குமாஸ்தாக்களுக்கு அயர்லாந்து சர்க்கார் 6 மாதச்சம்பளம் அதிகமாகக் கொடுக்கின்றனர். மற்றும் அவர்களுக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 60 பவுன் வீதம் அயர்லாந்து சர்க்கார் கொடுக்கின்றனர்.

திருமணச் சட்டத்தில் மாறுதல்கள்.

அநேகம் தேசங்களில் திருமணச் சட்டங்களும் கூட மாற்றப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஆஸ்திரியா ஸெக்கோ ஸ்லோவேகியா முதலிய தேசங்கள் திருமணச் சட்டங்களை மாற்றிக்கொண்டன. கணவர்களுக்கு மனைவிகள் அடிமைவேலை செய்துவர வேண்டும் என்ற பழய முறை அறவே அகற்றப்பட்டு விட்டது. திருமணவயது பதினைன்கிலிருந்து பதினாறாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஸ்பெயினில் முடியாட்சி ஒழிந்த பின்னர் திருமணச்சட்டத்தில் விசேஷ மாறுதல்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. முடியாட்சி காலத்தில் மனைவிகள் கணவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்பது திருமணச்சட்டத்தின் முக்கியமான அம்சமாகும். குடியரசு ஸ்தாபனம் செய்யப்பட்டபின்னர் கணவர்களும் மனைவிகளும் சரி சமமமாக வாழலாமென்று திருமணச்சட்டத்தில் ஓர் புதிய சீர்திருத்தம் செய்யப்பட்டது. ஸார் மன்னர் காலத்தில் ருஷ்யாவில் பெண்கள் ஆடவர்களுக்கு அடிமைவேலை செய்து வந்தனர். திருமணங்கள் மிகவும் ஆடம்பரமாக நடைபெற்றுவந்தன. ஆனால் குடியாட்சி ஏற்பட்ட பின்னர் பெண்களுக்கு ஆடவர்களுடன் சம உரிமைகள் வழங்கப்பட்டன. திருமணங்களை ஆடம்பரமாக நடத்தும் வழக்கமும் ஒழிக்கப்பட்டது. தற்பொழுது ருஷ்யாவில் சில நிமிஷங்களுக்குள் மிகவும் அமைதியாகத் திருமணங்கள் நடைபெற்றுவிடுகின்றன. மணம் செய்துகொள்ள விரும்பும் தம்பதிகள் திருமணப் பதிவு ரெஜிஸ்திரார் காரியாலயத்திற்குச் சென்று தங்களுடைய விருப்பத்தையும் பெயர்களையும் அறிவிக்கின்றனர். பின்னர் திருமண ஒப்பந்தத்தில் கையொப்பமிடுகின்றனர். அவ்வளவுதான்-அவர்களுடைய திருமணம் முற்றுப்பெற்றுவிடுகிறது.

வீரகேசரி.

10-அடி தூரத்திலிருந்து டெலிபோனில் பேச்சு.

லண்டன்;—

டெலிபோனை வாய்க்கெதிரில் வைத்துக்கொண்டு இப்போது பேசுகிறோம். 6 அல்லது 10 அடி தூரத்தில் படுத்துக்கொண்டோ உட்கார்ந்து கொண்டோ டெலிபோனில் பேசும் வசதி இப்போது பிரிட்டிஷ் தபாலாபீசில் செய்யப்பட்டிருக்கிறது. ஒலி பரப்பும் கருவி டெலிபோனில் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நாம் தூரத்தில் இருந்து பேசுவதை ஒலி பரப்பும் கருவி வாங்கி பரப்பிவிடுகிறது. அது மைக்கிராபோன் வழியாக டெலிபோன்.

ஃ ஃ

சூரியன் நிமிடந்தோறும் தனது சக்தியில் 250,000,000 டன் இழக்கிறதாக விஞ்ஞான சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

ஃ ஃ

ஒரு சராசரி ஆங்கிலேயன் வருடந்தோறும் 1,800,000 வார்த்தைகள் பேசுகிறானாம். 1200 தடவை கை குலுக்குகிறானாம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வியாசங்களுடனும் தக்க சேதிகளுடனும் தாராளமாய் எங்கும் ½அணுவுக்கு கிடைக்கும்படியாக நடைபெறும் போது நாம் ¼ அணுவுக்கு தினசரி அதில் 4-ல் ஒருபாக அளவு பத்திரிக்கைசேதிகள் அதிகமில்லாமல் நடத்துவது என்றால்எப்படி நடத்தப்பட முடியும் என்கின்ற பயம் ஒருபுரம் இருந்தாலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையானது ½ அணுவுக்கு போடப்பட்டதால் 2அணு பத்திரிக்கைகளாகிய "மெயிலும்" "இந்து"வும் ஒரு அணுவாகக் குறைக்கப்பட்டு விட்டது. அது போலவே காலணு அரையணுப் பத்திரிக்கைகளாலேயே ஒரு அணுப் பத்திரிக்கைகளும் விலை குறைக்கப்பட வேண்டியதாய் விட்டது என்று கருத வேண்டி இருப்பதால் அவைகளோடு போட்டிபோட்டுக் கொண்டு நமது ஊக்கத்தை வீணாக்குவது நமக்குஅவசிய மில்லாத காரியம் என்று நினைத்து நமக்கு எதிர்ப்பு இல்லாததும் கூடியவரை அனுகூலமா யிருப்பதாக கருதுவதுமான தமிழ்நாடு பத்திரிக்கையை நமது கொள்கைக்காக இல்லா விட்டாலும் சேதிக்காகவாவது அதைப்பயன் படுத்திக் கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே "பகுத்தறிவு" தினசரி பத்திரிக்கையை இன்று முதல் நிறுத்தி வைக்கலாம் என்று தீர்மானிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

இதுவரைபகுத்தறிவை ஆதரித்தவர்களுக்கும் அதற்கு உதவி செய்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நமது பத்திரிக்கை.

நமது தலைவர் ஈ. வெ. ரா. அவர்கள் "குடிஅரசு" பத்திரிகையில் வெளிவந்த ஒருவியாச சம்மந்தமாக கைது செய்யப்பட்டதும் நமது இயக்க எதிரிகள் இந்த சந்தற்பத்தை பயோகப்படுத்திக்கொண்டு தங்கள்விஷமப் பிரசாரத்தை மும்மரமாக நடத்தி நம்மை பலமாக எதிர்க்க ஆரம்பித்ததாலும், சுயமரியாதை சங்க மத்திய கமிட்டியின் தீர்மானமானது சுயமரியாதை இயக்கப் பிரசாரம் மகாநாடுகள் கூட்டி ஒரு அளவிற்காவது நமது கொள்கைகளை பிரசாரம் செய்ய இருந்து வந்த சந்தற்பங்களையும் தடுத்துவிட்டதாலும், இதர தினசரி பத்திரிகைகள் நமது பிரசாரங்களை திரித்துகூறி எழுதி வந்த விஷமப்பிரசாரங்களை தடுக்க நமக்கென ஒரு தினசரி வேண்டுமென்று கருதி பல கஷ்டங்களுக்கிடையே ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. இந்த விஷயம் பூராவும் நமது தோழர்களும் வாசகர்களும் நன்கறிந்ததே. எனினும் நமது முதல் விளம்பரத்தை பார்த்தவுடன் நமது சகவர்த்தமானிகள் பல தாங்கள் விலையை பகுதிக்கு குறைத்து கொண்டதாலும் நமது தலைவர் ஈ. வெ. ரா அவர்கள் நமது இயக்கத்திற்கென ஒரு தினசரி நடத்துவதில் செலவாகும் பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் ஒரு ஆங்கில வாரபத்திரிகையை நடத்துவதிலோ அல்லது பிரசாரத்திலோ செலவழிப்பது மிக சிறந்ததென அபிப்பிராயப்படுவதாலும் இன்றுடன் நமது "பகுத்தறிவு பத்திரிகையை நிறுத்திவைப்பதென முடிவு செய்யப்பட்டு விட்டது. என்றாலும் நம்மைநமது வாசகர்களுக்கும் பத்திரிகையின் சிறந்த அமைபிற்காக அல்லாது அதன் கொள்கையே பிரதானமென கருதி ஆதரித்து வந்த நமது அபிமானிகளுக்கும் நமது மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

சி. நடராஜன்.

தஞ்சை ஜில்லா கண்ணந்தங்குடியில் கள்ளர்வாலிபர் மகாநாடு.

இம்மகாநாடு 20-5-34 ஞாயிற்றுக்கிழமையன்று 10-45மணிக்கு தஞ்சை ஜில்லா கண்ணந்தங்குடி கிராமத்தில், புதுக்கோட்டை தோழர் கே. முத்துச்சாமி வல்லத்தரசு பி. எ. பி. எல்., எம். எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மகாநாட்டுத்தலைவர் திறப்பாளர் முதலியவர்களை காலை 10-மணிக்கு ஒரத்தநாடு சத்திரத்தில் இருந்து மோட்டாரில் மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக மகாநாட்டுப்பந்தலுக்கு அழைத்துச்சென்றார்கள். மகாநாட்டுப் பந்தல் பலசமதர்ம நீதிவாக்கியப் பாடல்களாலும், பலவர்ணகொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மகாநாட்டுக்கு ஆண்களும் பெண்களும், வாலிபர்களும்சுமார் 1000பேருக்குமேல் விஜயம் செய்திருந்தார்கள். மதுக்கூர் இளைய ஜமீன்தார் தோழர் எஸ் வி. ஆர். பி. கே. ஆர். கோபாலர் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து தனது பிரசங்கத்தைப் படித்தார்

மகாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் பிரம்பூர் தோழர் கே. நல்லமுத்து நாட்டார் அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று தனது வரவேற்புப் பிரசங்கத்தை வாசித்தார்.

மகாநாட்டுத்தலைவர் தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் தனது தலைமைப்பிரசங்க முன்னுரையாக "சமூக முன்னேற்றம்" கல்வி, ஒற்றுமை, வீரமான உணர்ச்சி, நாகரீகம்ஆகியவைகளைக்குறித்து மிகவும் விளக்கமாகவும்விரிவாகவும் பேசினர். கள்ளர் ஸ்கூல் மாணவர்கட்கு மகாநாட்டுத்தலைவரால் வகுப்புப்பாடபுத்தகங்களும்; நோட்டுப்புத்தகங்களும் பிரைசாக வழங்கப்பட்டது.

தஞ்சை வக்கீல் தோழர் சுயம்பிரகாசம் பி. எ. பி. எல். அவர்களால் வாசித்துக்காட்டப்பட்ட தீர்மானங்கள் பதினொன்றையும் தோழர்கள் ஆர். மலையப்பன் பி. எ. ஆர். ஏகாம்பரம் கே. பழனிவேலு ஆகியவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமானதாக நிறைவேறியது.

அதன்பிறகு தோழர்கள்:— எஸ் சோமசுந்தர சக்கரநாட்டார். கே. டி. அய்யாச்சாமி. ஆர்.ஏகாம்பரம் அ. ஏகாம்பரம். அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் "சமூக முன்னேற்றம்" "சங்கவளர்ச்சி" "நான் யார்?" "பெண்கள் நிலை" "மூடநம்பிக்கை, பகுத்தறிவு" என்பது பற்றி பிரசங்கம் செய்தார்கள்.

மகாநாட்டுத்தலைவரால் முடிவுரைகூறப்பட்டது. தோழர் ஆர். மலையப்பன் பி. எ அவர்கள்நன்றி கூறி மலர் மாலை சூட்டினர். மகாநாட்டார் முயற்சியால் எல்லோருக்கும் சாப்பாடு வழங்கப்பட்டது. இத்துடன் மகாநாடு மாலை 3-30 மணிக்கு முடிவடைந்தது. மகாநாட்டுத்தலைவர் திறப்பாளர் முதலியவர்கள் தஞ்சாவூருக்கும் தோழர் அ பொன்னம்பலம்அவர்கள் திருப்பூருக்கும் பிரயாணமானார்கள.

சந்திர மண்டலத்திற்குப் பிரயாணம்.

பேர்லின்:

சந்திர மண்டலத்தில் தனது கொடியை நாட்டுவதற்கு ஜெர்மனி முதல் தேசமாக இருக்குமா? பெர்லினுக்கருகிலுள்ள நியூபாபெல்பர்க் என்னுமிடத்திலிருக்கும் அவதான நிலைய டைரக்டர் பேராசிரியர் குத்னிச் என்பவர் சந்திர மண்டலத்திற்கும் பூமிக்கும் போக்குவரத்து நடைபெறுங்காலம் விரைவில் வந்து விடுமென்றும் சில அவசியங்களை முன்னிட்டு ஜெர்மனியர் பல கஷ்டங்களுக்கிடையே சந்திர மண்டலத்திற்குப் பயணம் செய்ய நேரிடுமென்றும் கூறுகிறார்.

ஒரே மாதை 5 முறை விவாகஞ் செய்துகொண்ட கணவர்.

வார்சா:-

போலந்தின் தலைநகரமாகிய வார்சாவில், அற்பச்சாமான்களை விற்பனை செய்யும் ஆப்ரஹாம் பிலெஷர் என்பவர், தமது மனைவியை நான்கு முறை விவாகரத்துச் செய்து இப்போது 5 ம் முறை அவளை விவாகம் செய்து கொண்டிருக்கிறார். சில தினங்களுக்கு முன் ஆப்ரஹாம் நோய்வாய்ப் பட்டார். தமது மனைவியை மறுபடியும் விவாகரத்துச் செய்ததற்காகவே கடவுள் இவ்வாறு தண்டிக்கிறார் என்பதாக அவர்நினைத்து, மறுபடியும் அவளைக்கூப்பிட்டுவிவாகம் செய்து கொண்டார்.

வைக்கம் வீரர் இலவச வாசகசாலை பிரைஸ் சீட்டு

மேற்படி இலவச வாசகசாலை ஆதிதிராவிடர்களின் முன்னேற்றங் கருதி பாடுபட்டு வருகிறது. பிரைஸ் சீட்டு விஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருந்த சிப்பந்தி சரிவர வேலை செய்யாததால் தாமதம் ஏற்பட்டு விட்டது. சிப்பந்தியை நீக்கிவிட்டதோடு வசூல் விஷயமாய் நானே பைசிகில் மூலம் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருக்கிறேன். இதுவே இறுதியான காலமாகும். பிரைஸ் எடுக்கும் காலத்தை புரட்சி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்படும். காலதாமதம் ஏற்பட்டதற்கு மிக வருந்துவதாக மானேஜர் எஸ். முத்துகிருஷ்ணன் திருவிடைமருதூர் முகாமிலிருந்து அறிவிக்கிறார்.

ரோஜா முத்தையா

(4ம் பக்கத்தொடர்ச்சி)

ச்சி முடிந்து சாப்பாட்டிற்காகக் கலைந்தது.

சேங்குந்தர் மகாநாடு.

இம்மகாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்ச்சி மாலை 3மணிக்கு தோழர் வி. டி. அரசு அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தோழர்கள் என். லெட்சுமண முதலியார், அ. பொன்னம்பலம், ஜே. எஸ். கண்ணப்பர், ஆகியவர்கள் "மனிதவாழ்க்கையும்கூட்டுறவும்" "மனித வாழ்க்கையும் புதுமையும்" "சமூக சீர்திருத்தம்"என்பதுகுறித்து நீண்ட பிரசங்கம் செய்தார்கள்.

பல தீர்மானங்கள் நீண்ட வாதங்களுக்கிடையில நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரை கூறினர். தோழர் என். எம். நடேசன் அவர்கள் நன்றி கூறி மலர் மாலை சூட்டினர். இரவு 7-30மணிக்கு மகாநாடு இனிது முடிவடைந்தது.

அடுத்த 22-வது செங்குந்தர் மகாநாட்டை பெருந்துரைக்கு அழைக்கப்பட்டிருக்கிறது. தோழர்கள் வி. டி. அரசு அவர்கள் சென்னைக்கும், ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் திருச்சிக்கும் அ. பொன்னம்பலம் அவர்கள் ஈரோட்டிற்கும் இரவு 8-45மணிக்கு மெயிலில் புறப்பட்டார்கள்.

தீர்மானங்கள்

1. தேசபக்தர்களான மாஜீ இந்தியா சட்டசபைத்தலைவர் வி. ஜே. படேல் அவர்களுடையவும், சென்னை ஹிந்து பத்திராதிபர் தோழர் எ. ரெங்கசாமி அய்யங்காருடையவும், தோழர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் இவர்களுடைய அகாலமரணத்துக்கு இம்மகாநாடு அனுதாபம் காட்டுவதாயும், அவர்களின் ஆத்மசாந்தியடையும்படி 2 நிமிஷநேரம் நின்று நடந்தத் தீர்மானம் நிறைவேரியது.

2. கலியாணகாலங்களில் பெண் வீட்டார் 1—0—0 ரூ மாப்பிள்ளை வீட்டார் 1—0—0 ரூ சங்கத்துக்கு தவராமல் தரும்படி தீர்மானம்நிறைவேறியது.

3. சென்ற வருஷம் காங்கயம் மஹாநாட்டில் நடந்த எல்லாத் தீர்மானங்களையும் வரவு சிலவு திட்டம் அடங்கிய கணக்குகளையும்அங்கீகாரம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

4. நமது மறபினர் பூராவும் கைத்தரியல் தயாரித்த துணிகளையே உடுத்தத்தீர்மானிக்கிறது.

5. மதுபானம் அருந்தக்கூடாதென்றும் தீர்மானிக்கிறது.

6. இனியேனும் நமது சிருவர்களுக்கு மேளவாத்தியம் பழகக்கூடாதென்றும் தீர்மானிக்கிறது.

7. செகண்டரிகல்விகற்கும்ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் உபகாரச்சம்பளம் தரக்கூடாதென்று 6-1-34தேதியன்று தீர்மானித்துள்ள 47. நெ. கவர்ன்மெண்டு உத்திரவை ரத்து செய்து விடவேண்டுமாய்கோருகிறதாக இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

8. ஸ்ரீமதி டாக்டர்முத்துலக்ஷ்மி அம்மாளால் கொண்டுவரப்பட்டு பொது ஜன அபிப்பிராயத்துக்கு விடப்பட்டிருக்கும் தேவதாசி மசோதாவை இந்த மகாநாட்டுதலைவர் தோழர் வி. டி. அரசு அவர்களை கொண்டு சட்டசபையில் வாதாடி உதவிபுறிய வேணுமாய் தீர்மானிக்கிறது-

9. வாலிபர் மகாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள மரபினர் அனைவரும் பிரசாரத்துக்கு வாலிபர்களை அனுப்ப தங்களால் இயன்ற பொருள் சகாயம் கோரியுள்ள தீர்மானம் நிறைவேறியது.

10. சத்திய பத்திரத்துக்கு பின்புபொட்டுகட்டப்பட்ட சிலர்தங்கள் தப்பிதத்தை உணர்ந்து அவர்கள் நம் குலத்தில் ஒருவரை ரிஜிஸ்தர் கலியாணம்செய்து கொள்ளுவதாய் இருந்தால் அதை ஆதரிக்க இப்போதே ஒரு கமிட்டி நியமிக்க கிராமத்தார்களை கலந்து செய்யும் சிபார்சை நிர்வாகக்கமிட்டி முடிவுசெய்யலாம் என்று தீர்மானிக்கிறது.

தலைவர் முடிவுரையில் சமதர்மதத்துவத்தை தான் மறுப்பதாகக் கூறி சில வார்த்தைகள் கூறினர். அதைத் தோழர் பொன்னம்பலனர் சமதர்மத்தை இரண்டாவது முறை எடுத்து சொல்ல தலைவா அனுமதிக்கவில்லை. கூட்டம் பின் இனிது முடிவடைந்தது.

திருப்பூரில் செங்குந்தர் மஹாஜன சங்கம் 21-வது மகாநாடு

21—5—34உ கோவை தோழர் லக்ஷ்மண முதலியார் கூட்டுரவு என்னும் விஷயமாய் பேசிய உபன்யாசம்;—

தோழர்களே, சகோதரிகளே, நாம் இன்று இந்த 2. தினங்களாக கூடி பற்பல விஷயங்களை மாபெருந் தலைவர்களின் சொர்ப்பொழிவுமூலம் கேட்டு மிகவும்ஆனந்தப்பரவசமடைந்தோம். என்னை மகாநாட்டுத்தலைவர் அவர்கள் கூட்டுரவு என்னும் விஷயமாய் பேசும்படி இட்ட கட்டளைக்கிணங்கி ஏதோ சில அனுபவங்களை உங்கள் முன் தெரிவித்துக்கொள்ளுறேன் நீங்கள் பொருமையுடன் இருந்துகேட்க வேணுமாய் முதலில் கெட்டுக்கொள்ளுகிறேன்.

முதலில் நமக்குள் பரஸ்பர ஒற்றுமைவேண்டும் மிருகஜாதிகளிலும் கூடபரஸ்பர ஒற்றுமை வேரூன்றி இருப்பதாக நாம் காண்கிறோம். ஒரு கலெக்டராக இருந்து பென்ஷன்உத்தியோகஸ்தர் நிக்கல்சன் என்னும் துரைமகனர் கூட்டுறவு-விஷயமாய் இன்னும் பற்பல விதமான சௌகரியங்களை நமக்கு ஏற்பாடு செய்து கொடுக்கும் விஷயமாய் யோசித்து முடிக்கதற்சமயம் நீலகிரியில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார். கூட்டுரவு சென்ற 1904வது ஆண்டில் தான் ஆரம்பம் ஆனது. கூட்டுரவு என்பது பரஸ்பர லேவாதேவிவிஷயமானகாணயமாற்றம். பிறகு 1914ல் இக்கூட்டுரவானது சட்டபூர்வமாக நமது நாட்டில் அமைக்கப்பட்டது. இது நமது நாட்டுக்கு புதியதாயிருக்கிறதே யொழிய மேல் நாடுகளில் இதன் இயக்கம் அதிகம் பரவி பல தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் வேண்டிய பயனை அளித்தும் வந்திருக்கிறது நமது நாட்டினர் இதன் பலனை தெரியாமல் இந்தக் கூட்டுரவு போக்கை சர்க்கார் போக்கென்றும் இதில் நமக்கு யாதொரு பாத்தியமும் இல்லைபோலும் காட்டிக்கொள்ளுகிறார்கள். இதன் நன்மைகளை 100க்கு 10 பேர்தான் அரிந்திருக்கிறார்கள். மேநாட்டில் "ராக்குடல்" என்னும் பிரதேசத்தில் கூட்டுரவு மூலம் அத்தேயத்து ஜனங்கள் எராளமான பலன் அடைந்திருக்கின்றார் டென்மார்க்கு தேசத்திய குடியானவர்களும்அதிகமான நன்மை அடைந்திருப்பதை நாம் பிரத்தியக்ஷமாய் பார்க்கிறோம். இதாலி தேசத்தில் கூட்டுரவு இயக்கம் பரவி முக்கியமாக குடிகளுக்கு அதிகபலனை கொடுத்து முன்னணியில் நிற்கிறது. அந்ததேசங்களில் ரயில்வே லயன்கள் போடுதல், அணைக்கட்டுதல் இன்னும் பற்பல பெரிய விஷயங்களை தொழிலாளர்கள் மூலம் கூட்டுரவு சங்கத்தார் பணஉதவி செய்து நடத்தி வருகின்றனர். ஆகையால் இது விஷயத்தில் நாம் இனியேனும் சிரத்தையெடுத்துக்கொண்டு கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து அதிகபலனை அடைவதற்கு முயலவேண்டும். அரசியல் விஷயத்திலும் நாம் நம்மால் இயன்றமட்டில் உழைக்க முயல்தல் வேணடும். இனியும் நாம் ஏமாந்திராமல் கூட்டுரவு சங்கத்தின் மூலம் நன்மைஅடைய ஒத்துழைக்க முயலவேண்டும் என்பதை உங்கள் முன் விண்ணப்பித்துக்கொண்டு உபன்யாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

அறிக்கை.

சமதர்மப்பிரசுரங்கள்.

சுயராஜ்யம் யாருக்கு? என்ற ஒன்று, இரண்டு, மூன்று பாகங்களையும் ஒன்றாகச் சேர்த்து பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. வேண்டியவர்கள் மூன்று பாகத்திற்கும் சேர்த்து 5 அணு ஸ்டாம்பு அனுப்பினாலும் சரி அல்லது வி. பி-பி யில் அனுப்பி வைக்கும்படி தெரிவித்தாலும் சரி வேண்டியவர்கட்கு அனுப்பிக்கொடுக்கப்படும். சில்லரையாக வாங்குபவர்க்கு மூன்று பாகத்திற்கு விலை அணு ஐந்து. மொத்தமாக 25 காப்பிகட்கு குறையாது வாங்குபவர்கட்கு காப்பி ஒன்றுக்கு 4 அணு விகிதம் கொடுககப்படும்.

ஏறகனவே 1—2—3 பாகங்கட்குப்பணம் அனுப்பி வைத்திருந்தவர்கட்கும புத்தகங்கள் அனுப்பிக்கொடுத்திருக்கிறோம். அவைகளில் இன்னும்வேறு யாராவது பணமனுப்பியிருந்து புத்தகம் கிடைக்கப்பெறுமலிப்பின் தகவல் தெரிவிக்க வேண்டுகிறோம்.

மனித உற்பவம் அச்சிலிருக்கிறது சில படங்கட்கு இன்னும் உத்திரவு கிடைக்கப் பெறுமையால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. 7—8 பாரம் கொண்ட நீண்ட புத்தகமாகையால் வெளிவர இன்னும் சொற்ப தினங்கள் செல்லும். 500 காப்பிகள் தான் வெளியிட உத்தேசித்துள்ளோம். மேலும் அதிக காப்பிகள் அச்சிட வேண்டுமானல் படிக்கிறவர்கட்கு அவா அதிகமிருக்க வேண்டும். இது வரையிலும் 500புத்தகங்கட்கு குறைவாகவே அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். இனிவரும் அப்ளிகேஷன் பேரில் அதிக காப்பிகள் அச்சிடப்படும். கிடைக்குமிடம்

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

நோயாளிகளுக்கோர் எச்சரிக்கை.

நல்லகாலம் வந்துவிட்டது.
இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.
ஆயிரக்கணக்கான நோய்கள் குணமாகிவிட்டது.

நீரழிவு, பவுந்திரம், வெள்ளை, வெட்டை முதலிய நோயுடையவாகள் நேரில் வந்து குணப்படுத்திக்கொள்ளுங்கள். பத்து நாட்களில் குணமடைவீர்கள். நீரழிவு, பவுந்திரம் முதலிய நோயுடையவர்களின் விலாசத்தைத் தெரிவிப்பவர்களுக்கு ஒரு ரூபாய் இனும் அனுப்பப்படும். விபரங்களுக்கு யெழுதித் தெரிந்துகொள்ளுங்கள்.

வேண்டிய சர்டிபிகேட்டுகளை நேரில்தெரிந்துகோள்ளுங்கள்.

அரண்மனை வைத்தியர்
எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,
சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெருவு
ஈரோடு.

திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம சமூக சீர்திருத்த சங்கம்.

கல்லிடைக்குரிச்சி:—17—5—34 மாலை 7 மணிக்கு இச் சங்கத்தின் 13-வது வாராந்தரக் கூட்டம் கமுதி போர்டு ஹைஸ்கூல் மாஸ்டர் தோழர் எல். இசக்கி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வார ரிப்போர்ட்டு வாசித்த பிறகு தலைவர் முன்னுரையாக சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் விடுதலை பெற்றதைப்பற்றி மகிழ்ச்சியுடன் பேசினர். பின்னர் பிரபல காங்கிரஸ்வாதியான தோழர் ஜி. மகாதேவய்யர் அவர்கள் சமூக ஊழியம் என்பதை பேசும் பொழுது தோழர் ஈ. வெ. ரா. தென்னாட்டு தலைவரென்றும் சிங்கத்திற்கொப்ப ஹிருதயத்தை பெற்றவரென்றும் தேச சேமத்தில் கருத்துக்கொண்ட ஒவ்வொரு வரும் அன்னாருக்கு வர்தனம் செலுத்தக்கடமை பட்டுள்ளோமென்றும் தோழர்களான கே. பி. சுப்பய்யா கே. ருமமூர்த்தி அசுத்தத்திற்கு காரணம் யார் என்றும் உபன்யாசம் செய்தார்கள். தீர்மானம் தமிழ் ஜில்லா விஸ்வகர்ம வாலிபர் முதல் மகாநாடு நடத்தவேண்டிய விஷயமாய் வரவேற்பு கழகம் அமைக்க கும்பகோணம் சு. மா. கக்ஷி வாசகசாலையில் 15-5-34ல் தோழர் கே. சினிவாச ஆச்சாரி அவர்கள் தலைமையில் விஸ்வகர்ம இளைஞர்கள் பொதுக்கூட்டம் நடைபெற்றதாக பத்திரிகை மூலமறிந்து, இச் சங்கம் பாராட்டுகிறதோடு, நமது சமூதாயத்தின் மக்கள் சுகமாக உயிர் வாழ்வதற்கின்றி யமையாத வழிகளிற் நமது முன்னோர்கள் தங்கள் அறிவையும் ஆற்றலையும் செலவிடாது மதம், ஜாதி, கடவுள் முதலிய சமயக் கோட்பாடுகளை வளர்ப்பதிலும் வீண் சடங்கு வைதிக ஆச்சாரங்கள் பெருக்குவதிலுமே இதற்கு முன் கூடிய மகாநாடுகளை பயன் படுத்தி வந்ததுபோலல்லாமல் சமதர்ம தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டும், நம் குலத்திற்குள் நாட்டார் மானுட்டார் மூனுட்டார் தெலுங்கர் என்ற பிரிவினைகளன்றி ஒருவர்க்கொருவர் சம்மந்தம் சமபந்தி போஜனம் தாராளமாக வளங்கவும் பால்ய விவாகத்தை தடுத்து விதவை மணத்தை ஆதரித்து பெண்கள் உரிமைகளாகிய தீர்மானங்களை மகாநாட்டில் தீர்மானித்தும் செயலளவில் கொண்டுவர வேண்டிய ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மகாநாடு வாலிப தோழர்களை கேட்டுக்கொள்வதாகவும் தோழர் எ. சிவனுசாரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறப்பட்டது என்று காரியதரிசி கே. வி. தங்கவேலு எழுதுகிறார்.

பீடித்தொழிலாளர்கள்.

இன்று கேரளநாட்டில் எங்கு பார்த்தாலும் பீடி தொழில் செய்து ஜீவனம் செய்து வருகின்ற தொழிலாளர்களைப்பார்க்கலாம். இந்ததொழிலாளிகள் கண்ணனூர், தலைச்சேரி பொன்னனி முதலிய இடங்களில் தான் அதிகம் காணமுடியும். ஆனல் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி ஆலோசித்தால் எவ்வளவோ கஷ்டமான நிலைமைதான் தென்படுகின்றது. அனுபவத்தினலேயே இதை என்னல் பார்க்கவும் நேர்ந்துள்ளது. காற்றோட்டமோ, அதற்குறிய ஜன்னல்களோ, ஒன்று மில்லாத மிகவும் சிறிய அரைக்குள் அதிகமான தொழிலாளிகள் நெருக்கமாக உட்கார்ந்து வேலை செய்வதையும் காண முடியும், இது மாத்திரமல்ல. வயது பூர்த்தியாகாத சிறு குழந்தைகளையும் இந்த இருட்டு அறையில் பார்க்க முடியும். (அப்பியாசம் செய்வது போலும்) பெற்றோர்களுடைய வறுமையினலும், தரித்திரத்தினலும் பால் மணம் போகாத சின்னஞ் சிறு குழந்தைகளையெல்லாம் பீடித்தொழில் கற்றுக்கொள்ளும்படி செய்கிறார்கள். (பிராயமாகாத தேக அப்பியாசத்தின் காக்ஷி போலும்) நாளுக்கு நாள் இக்குழந்தைகளுக்கு அறிவுமழுங்கி கல்வி வாசனையற்ற வர்களாகி போவதையும் தவிர என் அறிவுக்கெட்டிய மட்டும் மட்டும் இத்தொழிலாளிகள் க்ஷயரோகத்தினல் தான் அதிகம் மரணமடைகின்றார்கள். ஏனென்றால் காலை 7மணிமுதல் இரவு 9மணி வரைக்கும் ஓய்வில்லாமலும், சுகாதார வசதியில்லாமலும் உட்கார்ந்து வேலை செய்வதால் ரத்த ஓட்டமில்லாமலும் போகின்றதினலும் இந்த வியாதி இவர்களுக்கு ஏற்படுவதில் அதிசயம் ஒன்றுமில்லையென்றே கூறலாம்.

தொழிலாளர்களை முதலாளிகள் அவர்களுக்குப் பணம் சம்பாதிக்கும் ஒரு வகை ஜீவன இயந்திரம்போல் கருதி வருகிறார்களென்பதில் ஐயமில்லை. இந்த வாயில்லாப் பூச்சிகளான இத்தொழிலாளர்களின் குறைகளை கவர்ன்மெண்டிடமும், முதலாளிகளிடமும் எடுத்துக்கூறி இத்தொழிலாளர்களுக்கு வேண்டிய எல்லா வகை சௌகர்யங்களும் செய்து கொடுக்கவேண்டிய உத்தேசத்தினல் தான் நாங்கள் எஸ். என். பீடி தொழிலாளர் சங்கம் ஸ்தாபனம் செய்துள்ளோம். ஆகவே எல்லா பீடி தொழிலாளர்களும் எங்கள் எஸ். என். பி. தொழிலாளர் சங்கத்திற்கு உதவி செய்ய வேணுமாய் காரியதரிசிக் கேட்டுக்கொள்கிறார்.

நாகை செருநல்லூர் ஆதிதிராவிட இலவச ஆரம்பப் பாடசாலை.

இப்பாடசாலை கூத்தூர் வைக்கம் வீரர் இலவச வாசகசாலை யாருக்குச் சொந்தமானது. நான்கு வருஷகாலமாய் நடந்துவருகிறது. மக்கள் இலவசக் கல்விபயின்று வருகின்றனர். இப்பாடசாலைக்கு நடைபாதை ஏற்படுத்துவதாக லேபர் டிபார்ட்மெண்டார் பணம் வசூல் செய்து கொண்டு சில மாதத்திற்குப்பின் வாப்பீஸ் செய்துவிட்டார்கள். இவ்விஷயம் மிக விசனிக்கத்தக்கதே. பல மகஜர்கள் கவர்ன்மெண்டாருக்கு அநுப்பப் பட்டுவருவதாக ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

திருப்பூருக்கு நாயுடு வருகை.

21-5-34ந்தேதி பகல் 2-மணிக்கு தோழர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களும், சேலம் தோழர் பவான்சிங் அவர்களும், டாக்டர் நாயுடு அவர்களின் இரு குமாரர்களுடன் தமது சொந்தக்காரில் விஜயம் செய்து முசாபரி பங்களாவில் தங்கினர். ஊரிலுள்ள பல வியாபாரிகளும் மில் சொந்தக்காரர்களும், முனிசிபல் சேர்மேன், வைஸ் சேர்மேன், பத்திரிகை நிருபர்களும் அவர்களைக் கண்டு நெடு நேரம் பேசினர்கள். 22-5-34ந்தேதி பகல் திருப்பூர் பிரபல தரகு மண்டி வியாபாரம் தோழர் ஆ. ந. பழனியப்ப தேவரின் விருந்தினராக அழைக்கப்பட்டு அவ்விடம் இருந்துவிட்டு பகல் 4-மணிக்கு கோவைக்குப்பிரயாணமானர்கள்.

ஆர்ய வைசிய விதவைப் பெண் தேவை.

சிவப்பு நிறமும், திரேகக்கட்டும், அழகும், மாதம் ரூ. 30 சம்பாதிப்பும், குடும்பத்தில் சொத்தும், உடைய எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த 23-வயதுள்ள ஆர்ய வைசிய வாலிபரை மணந்துகொள்ள ஷை வகுப்பைச் சேர்ந்த 18-வயதுக்கு மேற்படாத சிறிது படிப்பும், அழகும் உள்ள ஓர் விதவைப்பெண் தேவை.

விலாசம்.

கே. பி. சேஷாத்திரி செட்டியார்.
ஷராப்பு வியாபாரம்,
கோயமுத்தூர்.

வைத்திய அறிக்கை.

வாய்வு, வயிற்றுவலி, கிராணி, இடுப்புவ்லி முதலிய வியாதிகளுக்கு

பஞ்சகல்ப சூரணம்.

இம்மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான நோயாளிகள் குணமடைந்து விட்டார்கள். ஒரு முறை சாப்பிட்டுப்பாருங்கள்.

இடுப்புவலி, வயற்றுவலி, வயிற்றுப்போக்கு, வயற்றுப்பிசம், வயற்றிரைச்சல், அண்டவீக்கம், பாண்டு, காமாலை, சோகை, வாய்கசப்பு, பசியில்லாதிருத்தல், புளியேப்பம், நெஞ்சுகரிப்பு, நெஞ்செரிவு, அஜீரணம், கிராணி, குன்ம வலி, குன்மக்கட்டி, குன்ம வாந்தி, இருமல், மூலவாய்வு, மஞ்சள்நீர் மூத்திரம், பெண்களுக்குண்டாகியசூதகசம்பந்தமான சகல வாய்வுகளும், குணமாகின்றது.

இடுக்காம் சோற்றில் நெய்யுடனே இதமாய் மூன்று பிடியுண்ணே
உண்டிடுவாய் பிரகன்னம். உதிரம் பொருமல் பெருவாய்வு
குண்டுபோல் திரண்டிடுதல் கூப்பிட்டோடல் கீழ் விளுதல்
மண்டிவலித்தல் களித்திடுதல் மயக்கம் சத்திபலவாய்வும்
தெண்டம் தெண்டம் நமச்செனப்போம். தேவி அமிர்தம் இதுதானே

என்றபடி இம்மருந்தை 3 நாள் சாதத்துடன் சாப்பிட்டால் எல்லா வாய்வுக்களும் இருந்த இடம் தெரியாமல் பறக்கின்றது. மருந்து சாப்பிடும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

3நாள் 6வேளை மருந்தடங்கிய டின்1 விலை ரூபா 2—0—0

ஆரண்மனை வைத்தியர் எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,

சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெரு, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	0-8-0	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்	0-6-0
சுதந்தரப்போர்	0-4-0	சுயராஜ்யம் யாருக்கு?	0-1-0
மாதர் சுதந்திரம்	0-8-0	சாமிகளின் அடிமை	0-12-0
விவாக விடுதலை	0-4-0	லோகல்போர்டுஆக்...(சென்னை)	2-0-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	2-0-0	பகுத்தறிவு கீதம்	0-1-0
		காந்தி-கிட்டு	0-1-0

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டட், ஈரோடு.

—※—

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:—இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச, நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

பெண் ஏன் அடிமையானள் விலை 0—5—0

—※—

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. விலை 0—3—0

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.
விலை அணா 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.
விலை அணா 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணா 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.
விலை அணா 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.
பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.
விலை அணா 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுகட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.
விலை அணா 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.